# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969


மட் /சாள்ஸ் மண்டபத்தில் (02.08.2003) நடைபெற்ற உலகத் தொடர்பு தின விழாக் காட்சிகள்












ஜூலை, ஆகஸ்ட் – 2003

12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜீலை, ஆகஸ்ட் - 2003

மலர் 35 ❄ இதழ் 05

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்
மெற்றில்டா இராஜேந்திரம்
செல்லத்துரை ஜெயராஜா
பெஸ்லீயோ வாஸ்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்



முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA. 30000**
**Tel: 065 - 26486**



விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)




## உள்ளே


அன்புடன் உங்களோடு - 1
நீங்களே செய்தியும்..... - 2
திருகோணமலையில்..... - 3
தொடர்புகளின் வழியாக...... - 4
தமிழர் - 5
மரியாவின் குழந்தைப் பருவம் - 6
இலக்கிய மஞ்சரி - 8
புதுக்கவிதையில் இயேசுவின்..... - 9
இன்னும் எத்தனை நாட்களுக்கு - 11
பாடல் சிறுகதைப் போட்டி...... - 12
அதிட்ட இலாபச் சீட்டின்..... - 13
மரணிக்காத மௌனங்கள் - 14
தனியார் கல்வி..... - 17
மாணவர் பக்கம் - 19
மட்டக்களப்புக் கல்வி..... - 20
போட்டி முடிவுகள் - 22
விவிலியம் கற்போம் - 23
அறிவை வளர்ப்போம் - 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

ஜூலை மாதத் தொண்டன் ஆகஸ்ட் மாதத்தையும் இணைத்துக் கொண்டு இரு மாத வெளியீடாக இம்முறை வருகிறது.

"இம்முறை மட்டுந்தானா? இப்போதெல்லாம் அடிக்கடி இப்படித்தானே! என்று நீங்கள் முணுமுணுப்பதும் கேட்கிறது.

ஒவ்வொரு மாதமும் உரிய காலத்தில் தொண்டனை வெளியிட வேண்டும் என்றே நாமும் விரும்புகிறோம். ஆனால் எப்படியோ, ஏதேதோ எல்லாம் நடந்து போகிறதே! யாரை நொந்து கொள்வது!

கிழக்கு மாகாணம் எப்போதும் நீறு பூத்த நெருப்பாகவே கனன்று கொண்டிருக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடமான கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் வாழ்கிறார்கள். இச்சேர்க்கையே இப்பிரதேசத்தின் பலமாகவும், பலவீனமாகவும் இருப்பது போல் தெரிகிறது.

வடபகுதியில் ஏற்பட்டது போன்று பெரும் படை நடவடிக்கைகளும், பாரிய அழிவுகளும், பொருளாதாரத் தடைகளும் இங்கு ஏற்படாமைக்கு பல்லின மக்களின் இருப்பும் ஒரு காரணமாகும். அதே வேளை தமிழ்ப் பிரதேசங்களின் இணைப்புக்கும், தமிழ் மக்கள் தமது நீண்ட காலப் போராட்டத்தின் – அளவிட முடியா தியாகங்களின் காரணமாகப் பெற முனையும் சுயாட்சிக்கும், பிரதேச உரிமைக்கும் நிலையான தீர்வுக்கும் இந்தப் பல்லின சமூக அமைப்பே பலவிதத்திலும் தடைகளை ஏற்படுத்த முனைகிறதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

காலத்துக்குக் காலம் கிழக்குப் பகுதியில் ஏற்படும் கலவரங்கள், ஆட்கடத்தல்கள், கொலைகள், ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நீண்டகால நோக்கில் எவருக்கும் நன்மைதரப் போவதில்லை. இங்கு எல்லோரும் தமது இனத்துவ அடையாளத்தோடும், கௌரவத்தோடும், அமைதியாக வாழ உரிமை உள்ள அதே வேளை "எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்" என்ற வகையில் செயல்பட முனைவதும், விதைத்தவனை விரட்டி விட்டு வேறொருவன் அறுவடை செய்ய முனைவதும், அதற்காகவே தேவையற்ற வதந்திகளைத் தூவி கலவரங்களை ஏற்படுத்துவதும் கிழக்கு மாகாணத்தின் அமைதியை நிரந்தரமாகச் சீர்குலைக்கும் முயற்சியாகவே அமையும்.

" சாயிற பக்கம் சாயிற மாடுகளாக" மக்கள் இருக்கும் வரையில் சமூக விரோதிகளுக்குக் கொண்டாட்டந்தான். ஆகவே, இனவெறியர்களதும், சுயநலமிகளதும் வலைகளில் வீழ்ந்து விடாது மக்கள்தான் விழிப்போடு இருக்க வேண்டும்.

- இணை ஆசிரியர்



## இறைவாக்கு



**ஆண்டவராகிய நான் நீதியை விரும்புகிறேன், கொள்ளையையும், குற்றத்தையும் வெறுக்கிறேன் அவர்கள் செயலுக்கு ஏற்ற கைமாற்றை உண்மையாகவே வழங்குவேன்**

எசாயா 61/8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீங்களே செய்தியும் ஊடகமும்"

இன்றைய நவீன ஊடகங்களின் தாக்கம் உலகைப்பல வழிகளில் மக்களின் பேச்சுக்கும் பார்வைக்கும் சிந்தனைக்கும் அழைத்துக்கொண்டும் சவால் விட்டுக்கொண்டும் இருக்கிறது. ஒரு காலத்தில் "கேட்டல்" வழியாகப் பல செய்திகளை அறிந்து வந்த மக்கள், வாழ்க்கையில் ஒரு படி முன்னேறிப் படித்துத் தெரிந்து கொண்டார்கள். தற்போது உலகிலே ஒரு புதிய கலாச்சாரம் நிலவி வருகிறது. அக்கலாச்சாரத்தை கிறிஸ்தவ முறையில் பெயரிட்டால் நான் "தோமைக் கலாச்சாரம்" என்பேன். எல்லாவற்றையும் தொட்டு, உண்ந்து, பார்த்து அறிந்து கொள்வதே இந் நவீன கலாச்சாரம்.

## கேட்பதில் புரட்சி

இன்று நாம் பிறரோடு உடனடியாக, எந்த இடத்திலிருந்தும் தொடர்புகொள்ள "செல்போன்" உதவுகிறது. செல்போனை நாம் உபயோகிக்காமல் பழையபடியே நிலவழித்தொடர்பு கொள்ள நேருமாயின், நம்மைப் பார்த்து, நேரத்தை வீணடிகிறாய், காசைக்கரைக்கிறாய் என்று சொல்லி நம் கரத்திலே வலுக்கட்டாயமாக ஒரு செல்போனைத் திணிக்கும் அளவிற்கு செல்போன் விற்பனையாளர்கள், நற்செய்திப் போதகர்கள் போல் நம்மை அன்றாடம் அழைத்து "உங்களுக்கோர் நற்செய்தி" உங்கள் செல்போனில் வருகின்ற செய்திகள் எல்லாம் இலவசம், இலவசமாகப் பெற்று மகிழுங்கள் என்பதைப் போன்ற வசனங்களைச் சொல்லி நம் கரத்தில் செல்போனைத் திணித்து விடுகிறார்கள்.

புனித சவேரியாரின் கரத்தில் சிலுவையை உயர்த்திப் பிடித்திருப்பதைப் பார்க்கும் நாம் இன்று நம் குருக்களின்கையில் "செல்போன்" உயர்ந்து வலுப்பெறுவதையும் பார்க்கிறோம். நல்லதுதான், இதன் வழியாக நற்செய்திப் பணியைச் செய்வதில் சிலர் ஆர்வத் தொண்டர்களாக இயங்கி வருகிறார்கள். SMS மூலம் இறைவார்த்தை, சங்கீதங்கள், நல்ல செய்திகளையும் ஆறுதலும், சமாதானமும், அன்பு மொழியும், நம்பிக்கையும், உற்சாகமும் தரும் வார்த்தைகளையும் அன்றாடம் கொடுக்கும் நவீன ஊடக நற்செய்தித் தொண்டர்களாக நீங்கள் மாறலாம். உங்கள் செல்போனில் உள்ள SMS வழி இப்பணியைச் செய்யலாம்.

## பார்ப்பதில் புரட்சி

ஓவியங்கள், திரைப்படங்கள், வீடியோக்கள், CD, DVD என்று நாம் பார்ப்பதில் பல முன்னேற்றங்கள் தொடர்கின்றன. "Virtual reality" என்ற விஞ்ஞானக்கண்ணோக்கு நம் கண்கள் முன் காட்சிகளை நாம் உணர்வது போன்றும் நாமே செயல்படுவது போன்றும் அதனுடன் ஏட்டிக்குப் போட்டியாக இயங்கவும் வைக்கிறது. தற்போது இத்தகைய யுக்தியை விஞ்ஞானத்தில் சண்டைப் பயிற்சி, விமானம், மற்றும் விண்கலத்தை ஓட்டும் பயிற்சி, விளையாட்டுகள், மருத்துவர்களுக்கு "Virtual Operation" முறையில் அறுவைசிகிச்சை செய்யும் பயிற்சி கொடுத்து வருகிறார்கள். இத்தகைய யுக்தியை நாமும் பயன்படுத்தி நற்செய்தியை நம் கண்முன் கொண்டுவருவதிலும் பார்ப்பதிலும் உணர்வதிலும் கொண்டு வரும் பரட்சியை வெகு விரைவில் திருச்சபை பயன்படுத்தும் என்பதில் வியப்பில்லை.

## தொட்டுச் செயலாக்கம்

"தோமைக் கலாச்சாரம்" என்று புதிதாக ஓர் கலாச்சாரத்தைக் குறப்பிட்டேன். தற்போது இத்தகைய ஒரு கலாச்சாரம் பல இடங்களில் பரவி வருகிறது. Computer [கணனி] இக்காலகட்டத்தில் நமது அலுவலகத்தில் ஒரு சிறப்பிடத்தைப் பிடித்திருக்கிறது. இதனை இயக்க 'Mouse" என்ற உபகரணம் மிகவும் தேவையானதாக இருந்த காலம் சென்று, தற்போது நமது Compiuter-ல் தோன்றும் காட்சியில், அமைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குத் தேவையான இடத்தைத் தொட்டால் போதும், நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ அது உடனடியாக நடக்கிறது. பல வங்கியில், பஸ் மற்றும் இரயில் நிலையங்களில் டிக்கெட் வாங்குவதற்கும் இரயிலின் நேரத்தை அறிவதற்கும் தொலைதூரத்தை அறிவதற்கும் இன்று ஒவ்வொரு நிறுவனமும் தங்களின் பணிகளை, தாங்களே தொட்டுத்தெரிந்து கொள்ள வசதிகள் செய்து கொடுக்கின்றன. நாமும் திருவிவிலியத்தைப் பற்றியும், ஆண்டவர் வாழ்ந்த புண்ணிய பூமியைப் பற்றியும் திருச்சபையைப் பற்றியும் அதன் செய்திகளையும் இம்முறையில் செயலாக்கம் செய்யும் காலம் விரைவில் வரவிருக்கிறது என்பதை உணர்வோம்.

"உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்"என்றுரைத்த இயேசு, இக்காலகட்டத்தில் நாமே நற்செய்தியாகவும் ஊடகமாகவும் வாழ அழைக்கிறார். நம்மை நாடிவரும் மக்கள் நாம் போதிக்கும் இறைவார்த்தையால் ஒரு புரட்சியை, தாங்கள் கண்ணாரக்காணும் திருச்சபையில் ஒரு மறுமலர்ச்சியை, உள்ளத்தின் ஆழத்திலிருந்து தூய ஆவியின் உந்துதலால் தொடப்பட்டு "ஆண்டவரே என் தேவனே" என்று ஒரே குரலாய் நற்செய்தி முழக்கமிட வேண்டுமாயின் நம்மையே நாம் நற் செய்தியின் நிறைவாகவும் நம் சொல், செயல், சிந்தனையை வெளிப்படுத்தும் சிறந்த ஊடகமாகவும் செயல்படத் தயாரித்து கொள்ள வேண்டும்.

▲ அருட்பணி A.P. பெனடிக்ற்

# திருகோணமலையில் தேசிய சமூகத் தொடர்பு
## ஆணைக்குழுவின் கூட்டமும், கருத்தரங்கும்

இலங்கை கத்தோலிக்க மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு உறுப்பினர்கள் பங்குகொண்ட கூட்டம் கடந்த ஜூலை 16ம் திகதி திருகோணமலை, உப்புவெளியிலுள்ள மேய்ப்புப்பணி நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேசிய சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் தலைவரும் பதுளை மறைமாவட்ட ஆயருமான பேரருள் திரு.வின்ஸ்ரன் பெர்னான்டோ, ஆணைக்குழுவின் உதவித் தலைவரும் திரு/மட். மறைமாவட்ட ஆயருமான பேரருள் திரு.யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, தேசிய இயக்குனரான அருள்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ உட்பட மறைமாவட்டங்களின் சமூகத் தொடர்புத்துறை இயக்குனர்களும் ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு முன்பாக அன்று காலை 09.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை தொடர்பு சாதனங்களும் அதன் தாக்கங்களும் என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட இளைஞர்கள், இளம் பெண்கள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கு சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெவ்வேறாக நடைபெற்றது. சிங்கள மொழியில் நடை பெற்ற கருத்தரங்கை அருள்தந்தை காமினி பெர்னாண்டோ அவர்கள் நெறிப்படுத்தினார். தமிழ் மொழியில் நடை பெற்ற கருத்தரங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாகத்தின் தொடர்பாடல் துறையின் தலைவரான அருள்தந்தை சி.பி.இராஜேந்திரம் அவர்கள் நெறிப்படுத்தினார். இவருடன் திரு.ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம், திரு.தாபி சுப்ரமணியம், திரு.சித்தி அமரசிங்கம் ஆகியோர் கருத்தரங்கை வழிநடத்தினார்.

**கருதினால் குழுவின் புதிய தலைவராக கருதினால் ஜோசப்ரட்சிங்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் துணைத்தலைவராக வத்திக்கான் செயலாளர் அஞ்சலோ சொடானோ தெரிவாகியிருக்கிறார் கருதினால்களின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல், திருத்தந்தையின் மரணம் பற்றிய தகவல்களை மற்றைய கருதினால்களுக்கு அறிவித்தல், புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துதல் என்பன இவரின் பணிகளாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"இறைவன் வாழ்வை விரும்புகிறார். மனிதர்களும் உறவுகளோடு வாழவேண்டும் என்று விரும்புகிறார். உறவுக்கு அடிப்படையானது தொடர்புகள். மனித உறவு வலுப்பட இறை உறவு தேவை. தொடர்பு சாதனங்கள் மனித உறவை வளர்க்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்."***




# தொடர்புகளின் வழியாக, ஊடகங்கள் உறவுகளை வளர்க்க வேண்டும்

**உலகத் தொடர்புதின விழாவில்**

அருள்தந்தை ஏ. தேவதாசன்

இவ்வாறு, திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழு நடாத்திய உலகத் தொடர்புதின விழாவில் மறைமாவட்ட குரு முதல்வர் அருள்தந்தை ஏ.தேவதாசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

இம்மாதம் 2ம் திகதி சனிக்கிழமை மட்/சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற உலகத் தொடர்புதின விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட அருள்தந்தை தேவதாசன் மேலும் பேசுகையில்

"மனித உறவை வளப்படுத்த, தொடர்பு சாதனங்களில் பணியாற்றுகின்றவர்கள் படைப்புக்களை உருவாக்குகின்ற பொழுது எப்பொழுதும் உறவை உங்கள் மனதிலே வைத்திருங்கள். நான் எழுதுகின்றவை, தயாரிப்பவை மனித உறவுக்கு இட்டுச் செல்லுகின்றதா என்பதை மனதில் இருத்தி எதிர்காலத்தில் படைப்புக்களை உருவாக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்/மண்முனை வடக்கு பிரதேசச் செயலாளர் திரு.கே.கதிர்காமநாதன் அவர்கள் தமதுரையில் "தொடர்பு சாதனங்களின் பாவனை நமது நாட்டில் அண்மைக் காலத்தில் மிகவும் அதிகரித்துள்ளது. ஆனால், இந்தத் தொடர்பு சாதனங்கள் சமூகத்தைச் சரியாக வழிநடத்திச் செல்கின்றனவா என்பது பற்றி நாம் ஆய்வு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் இது சம்பந்தமாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவை சமூகத்தை சீரழிக்கிறதென்று ஒரு சாராரும், சமூக அபிவிருத்திக்கு, வளர்ச்சிக்குத் துணை செய்கிறது என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். ஆகவே இதன் உண்மையான பயன்பாடு பற்றி சமூக மட்டத்திலே ஓர் ஆய்வு செய்யப்பட வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

திருமதி வசந்தி நேரு அவர்களின் மாணவியரின் அஞ்சலி நடனத்துடன் ஆரம்பமான இவ் விழாவில் சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருள்திரு ஜே.ஏ.ஜி.இரட்ணகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மறை மாவட்ட சமூகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு "அமைதிப்பணியில் தொடர்பு சாதனங்கள்" மற்றும் "சமாதானமும் தொடர்புசாதனங்களும்" எனும் தலைப்புகளில் நடைபெற்ற சிறுகதை, பாடல் போட்டிகளில் வென்றோருக்கான பரிசளிப்பும் திருகோணமலை, மட்டக்களப்பு கலைக் குழுக்களின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அத்துடன் சமூகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பில் வென்றோருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவின் சிறப்பு நிகழ்வாக மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள மூத்த கலைஞருள் ஒருவரான திரு.செல்லத்துரை ஜெயராஜா அவர்கள் சமய, கலை, இலக்கிய, ஊடகத் துறைகளில் ஆற்றிய பங்களிப்புக்காக இவ்வாண்டுக்கான தொடர்புசாதன விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இறுதியாக சமூகத் தொடர்பு ஆணைக்குழு உறுப்பினர் திரு.ஆழியோன் அனைவருக்கும் நன்றி கூறினார். தொடர்புதின விழா நிகழ்ச்சிகளை சி.பி.ஹரிச்சந்திரன் தொகுத்து வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்

சங்கு கொண்டு ஊதுவோம் சமாதானம் பேணுவோம்
எங்கள் நாட்டில் யாவரும் இணைந்து ஒன்றாய் வாழுவோம்
மங்கிடா நற்கல்வியும் மலையைப் போல உறுதியும்
பொங்குங் கலைகள் யாவையும் போற்றி இன்பம் காணுவோம்

அன்னைத் தமிழை வாழ்த்துவோம் அரியணைமே லேற்றுவோம்
என்ன இன்னல் ஏற்றுந் தமிழர் மண்ணைக்காக்க விரைகுவோம்
முன்னை வேந்தர் மடியிலே முதிர்ந்த புலவர் அவையிலே
அன்னை தவழ்ந்த செய்தியை அகிலமெங்கும் சாற்றுவோம்.

ஏர்பிடித்து ஓட்டுவோம் அணைகளிட்டுத் தேக்குவோம்
பார் செழிக்க நெல்விதைத்துப் பங்கமின்றி வாழுவோம்
ஊர்கள் தோறும் பண்ணைகள் உழைக்க நல்ல ஆலைகள்
ஆர்வமாகத் தொழில்கள் செய்து அறம் வளர்த்து வாழுவோம்.

கப்பல் கட்டி ஓட்டுவோம் கடலிற் செல்வம் ஈட்டுவோம்
இப்புவியின் திக்கிலெங்கும் எங்கள் புகழை நாட்டுவோம்
சிப்பி முத்தும் பவளமும் உப்பும் மீனும் ஏற்றுவோம்
அப்புறத்தின் திரவியங்கள் அனைத்துமிங் கிறக்குவோம்.

வான்கலன்கள் கட்டுவோம் வடிவமைத்துக் காட்டுவோம்
வண்ணஜாலம் காட்டுங்கிரக வாயில்நோக்கி ஓட்டுவோம்
ஊனுடைத்துயிர்களும் உள்ளமற்றும் யாவையும்
ஆனகாற்று நீர் நிலம் அனைத்தும் ஆய்ந்து மீழுவோம்.

தே.ஜே. வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வரலாற்றில் பல அறிஞர்கள் தலைவர்கள் போன்றவர்களுடைய குழந்தைப் பருவம் பற்றி அவ்வளவு விரிவாகக் கூறப்படுவதில்லை, எழுதப்படுவதும் இல்லை. அவர்களின் பொதுப்பணி வாழ்க்கைதான் சிறப்பிடம் பெறுகிறது. இதற்கு யேசுவின் வாழ்க்கையும் மரியாவின் வாழ்க்கையும் விதி விலக்கானவை அல்ல. மரியாயின் குழந்தைப்பருவத்தைப் பற்றி நமக்குத் தெரியும். குறிப்புக்கள் மத்தேயு 1-2 லூக்கா 1-2 இவைகளே குழந்தைப் பருவ நற்செய்திப் பகுதிகள்.


# மரியாவின் குழந்தைப் பருவம்

மரியாயின் பெற்றோர் பெயர் கூட நற்செய்தியில் சொல்லப்படவில்லை. மரியாயின் குழந்தைப்பருவம், மங்கைப்பருவம் பற்றிய குறிப்புக்கள் புதிய ஏற்பாட்டிலும் புனைப்பெயரில் எழுதப்பட்ட நூல்களிலுமிருந்துதான் கிடைத்துள்ளன. மரியாயின் குழந்தைப் பருவத்தைப் பற்றிக் கூறும் நூல்களில் முதலிடம் பெறுவது யாக்கோபு எழுதிய முதல் நற்செய்தி என்னும் நூல். இது கி.பி. 150க்குப் பிற்பட்டது. இதை எழுதியது ஆண்டவருடைய சகோதரர் யாக்கோப்பு இயேசுவின் தாய் மரியா என்பதும் மரியாயின் கணவர் யோசேப்பு என்பதையும் மத்தேயு 1: 18 - 25 லுக்கா 1- 26-38 பகுதிகளில் தெரிய வருகிறது.

நற்செய்தி நூலில் மரியா நாசரேத்தூரில் பிறந்தார் என்றும் அவர் தாவீது குடும்பத்தைச் சார்ந்தவர் என்றும் செல்லப்படுகிறது. வானதூதர் கூறியபடி அவருக்கு மரியா என்று பெயர் வைக்கப்பட்டதாகச் செல்லப்படுகிறது. மரியாவின் தந்தை (யோவாக்கிம் சுவக்கீன்) இவர் பெரும் செல்வர். இவர் தம் உடைமைகளில் எல்லாம் இரண்டு பங்கை ஆண்டவருக்குக் காணிக்கையாக ஒப்புக் கொடுப்பார். இவர் தம் காணிக்கைகளைக் கொண்டு வரும் போது இசுரயேலின் புதல்வர்கள் அவர் முன் வந்து நின்றனர். ரூபன் என்னும் ஒருவன் யோவாக் கியைப் பார்த்து, ஆண்டவருக்குக் காணிக்கைகளை ஒப்புக் கொடுக்க உனக்கு அருகதை இல்லை. ஏனெனில் நீ மகப்பேறு அற்றவன் என்றான். இதைக்கேட்டு யோவாக்கிம் சுவக்கீன் மனம் வருந்தி பாலைவனத்துக்குத் தனியாகச் சென்றார். ஆபிரகாமுக்கு மகப்பேற்றை அளித்ததை நினைத்து ஆண்டவரை நோக்கி உருக்கமாகச் செபித்தார். யோவாக்கிம் சுவக்கீன் என்பவருடைய மனைவி அன்னம்மாள். இருவரும் தம் மலட்டுத் தன்மையை நினைத்து மனம் வருந்தி ஆண்டவரை நோக்கிச் செபிக்கிறார்.

ஆண்டவரே சாராவுக்கு மகப்பேற்றை அளித்தது போல எனக்கும் மகப்பேற்றை அளித்து ஆசீர்வதியும் என்று செபித்தார் அப்பொழுது ஆண்டவரின் தூதர் அன்னாவுக்குத் தோன்றி அன்னா உன் செபத்தை ஆண்டவர் கேட்டார் நீ கருவுற்று ஒரு குழந்தையைப் பெறுவாய் அக்குழந்தை உலகம் முழுவதும் பெருமையாகப் பேசப்படும் என்றார். யோவாக்கிம் சுவக்கீன் வீட்டுக்கு வந்தார். அன்னா கருவுற்றுப் பெண்குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தார்.

அன்னம்மாள் கொடுத்த வாக்குறுதியின்படி மரியா மூன்று வயதில் கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டு ஒப்புக் கொடுக்கப் படுகிறார். இசுரயேல் மக்களிடையே தூய்



மையான பல கன்னியர்களை அழைத்து எரியும் திரிகளை அவர்களிடம் கொடுத்து ஆடம்பரத்துடன் குழந்தையான மரியாளைக் கோவிலுக்குக் கொண்டு போயினர். குழந்தையான மரியா திரும்பிப் பார்க்காமல் உலகக் கவர்ச்சியால் இழுக்கப்படாமல் இருக்க வேண்டுமென்று செபித்தனர். கோவிலிலிருந்த குரு குழந்தையான மரியாவைத் தூக்கி முத்தமிட்டு பீடத்தில் மூன்றாவது படியில் விட்டார். அக்குழந்தை தானாகவே ஏனையபடிகளைத் தாண்டிச் சென்றது. வானதூதரால் அன்புடன் கண் காணிக்கப்பட்டார். மரியா வளர்ந்து 12 வயதில் பூப்படைந்தார் சில வருடங்குளுக்குப் பின் மரியாயின் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். மரியாவை மணக்க மனைவியை இழந்த ஆண்களும் வந்தனர் சக்கரியா வந்து ஆடவர்களைப் பார்த்து ஒவ்வொருவரும் ஒரு கோலை கையில் ஏந்திக்கொண்டு வாருங்கள், யாருக்கு ஆண்டவர் அடையாளம் காட்டுகிறாரோ அவருக்கே மரியா மனைவி ஆவார் என்றார். இதைக் கண்ட யோசேப்பு தம் கையில் இருந்த கோடரியைப் போட்டு விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களோடு போனார். எல்லோருடைய கோல்களையும் பெரிய குரு சக்கரியா வாங்கிக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்து செபித்தார் பின்னர், அவைகளைப் பெரிய குரு வெளியே கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தார். யோசேப்பு தன் கோலைப் பெற்றதும் அதிலிருந்து புறா ஒன்று புறப்பட்டடு அவர் தலையில் வந்து அமர்ந்தது. அப்போது குரு, 'யோசேப்பே நீர் பேறுபெற்றவர் மரியா என்ற கன்னியை நீர் மனைவியாக ஏற்றுக் கொள்' என்றார்.

யோசேப்பு மரியாவை ஏற்றுக்கொள்ள மறுத்தார் குரு யோசேப்புக்கு புத்தி கூறியதும் சம்மதித்தார். மரியாவுக்கு ஒப்பந்தம் செய்யும் போது அவளுக்கு வயது 14. யோசேப்பு மரியாளை வீட்டிலே விட்டு விட்டு கட்டிடம் கட்டுவதற்காக வெளியே சென்றார் திருத்துாயகத்தை மூடியிருக்கும் திரைச் சீலையையும் கோயிலில் பயன்படுத்தும் விலை உயர்ந்த துணிகளையும் நெய்யக் கூடிய தூய்மையும் தகுதியும் மரியாளுக்குக் கிடைத்தது. தன்னுடைய வீட்டில் துணிவேலை செய்து கொண்டிருக்கும் போதுதான் சக்கரியா என்ற குரு பேசமுடியாமல் போனார் (லுக்கா 1: 20-22) மரியா தண்ணீர் எடுத்துவரச் சென்ற போது ஒரு குரல் கேட்டது "அருள்மிகப் பெற்றவளே வாழ்க! ஆண்டவர் உம்முடனே பெண்களுள் பேறு பெற்றவரே!" என்று ஒலித்தது மரியா அச்சம் கொண்டாள். அப்போது வான தூதர் தோன்றி மரியே அஞ்சாதீர் என்று தொடங்கி இயேசு பிறக்கப்போகும் செய்தியைச் சொன்னார். மரியா எலிசபெத்தின் வீட்டில் 3 மாதம் தங்கி இருந்தார் அவருடைய உடலில் ஏற்பட்ட மாற்றத்தை பார்த்து மரியா வீட்டினுள்ளே தங்கியிருந்தார். அப்போது மரியாளுக்கு 16 வயது. மரியா கர்ப்பம் தரித்து ஆறுமாதம் ஆனபோது யோசேப்பு வீடு திரும்பினார். மரியா கருவுற்றிருப்பதைக் கண்டு கலங்கினார். மரியா அழுது கொண்டு 'நான் துாய்மையானவள் நான் மனிதனை அறியாதவள்' என்று கூறினார். யோசேப்பு இரவில் துாங்கும் போது கடவுளின் துாதர் தோன்றி நடந்ததைக் கூறினார். பின் மரியாளை ஏற்றுக்கொண்டார்.

குறிப்பு :- இக்கட்டுரை டிவைன்வோய்ஸ் என்ற பத்திரிகையில் ஆடிமாத வெளியீட்டில் அருள்பணி அ.பெஞ்சமின் அவர்களால் எழுதப்பட்டது.

*யோ. ஞானம்.*
*இ: 19 மின்சார வீதி*
*மட்டக்களப்பு.*

## வெரித்தர்ஸ் வானொலி உறவுச்சங்கமம்

பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணிப் பொறுப்பாளர் உள்ளிட்ட நால்வர் அடங்கிய குழுவினர் உறவுச் சங்கமம் நிகழ்சிகளை நடத்த இலங்கை வந்திருந்தனர் ஆகஸ்ட் 07ம் திகதி மன்னாரிலும் 08ம் திகதி ஹற்றனிலும் 09ம் திகதி நுவரேலியாவிலும் 10ம் திகதி கல்முனையிலும் உறவுச் சங்கமம் நிகழ்வுகளை நடத்தினர்.

வெரித்தாஸ் தமிழ்ப்பணியை மேலும் வளர்கவும் நேயர்களிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்சிகளை மட்/சமுகத்தொடர்பு நிலையம் ஒழுங்கமைத்திருந்தது கல்முனையில் நடைபெற்ற உறவுச்சங்கமம் நிகழ்வுகளுக்கு திரு/மட்ஆயர்பேரருள் திரு யோசப்கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் கல்முனைமறைக்கோட்ட முதல்லர் அருட் தந்தை மொறாயஸ், கல்முனை மாமாங்க வித்தியாலய அதிபர் திரு .டி பெஞ்சமின் ஆகியோர் சிறப்பு அதிதியாககலந்து கொண்டனர், இந்நிகழ்வுக்கு வெரித்தாஸ்தமிழ்ப் பணிப்பொறுப்பாளர் அருள் திரு சிங்கராயன் அவர்களுடன் வெரித்தாஸ் வானொலி பொதுமுகாமையாளர் அருள் தந்தை கார்லோஸ் லாரியோசா, ஆசிய ஆயர் பேரவையின் சமுகத் தொடர்பு துறைச்செயலர் அருட்தந்தை பிரான்ஸ் யோசப் எயிலார்ஸ் மற்றும் சென்னை சாந்தோம் கலைத்தொடர்பு நிலைய உதவி இயக்குனர் அருட்தந்தை டேவிட் ஆரோக்கியராஜ் ஆகியோர் வருகைதந்திருந்தனர் இன்நிகழ்வில் உரைகள், கலைநிகழ்சிகள், பாராட்டுக்கள், பரிசளிப்புகள், விபரனப்படக்காட்சி, கலந்துரையாடல் என்பன இடம் பெற்றன. கல்முனை நேயர்கள் சார்பில் கல்முனை மறைக்கோட்ட சமுகத் தொடர்பு ஆணைக்குழு உறுப்பினர் திரு ஜே. டேவிட் நன்றியுரை நிகழ்த்தினார். நிகழ்ச்சிகளை திரு சி.பி. ஹரிச்சந்திரா தொகுத்து வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

-ஆழியோன்-

## பரீட்சையில் தவறவும் அதிட்டம் வேண்டும் (சிலவேளைகளில்)

நமது அன்றாட வாழ்க்கையில் பரீட்சைகள் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டன. பாடசாலை மட்டப் பரீட்சைகள், பரீட்சைத்திணைக்கள பரீட்சைகள், வேலைவாய்ப்புகளுக்கான போட்டிப் பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள் என்று பரீட்சைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றன.

க.பொ.த (சா.த) பரீட்சையானது ஒரு தடை தாண்டல் பரீட்சையாகும். தேவையான குறைந்தளவு பெறுபேறுகளைப் பெற்றவர் கூட அதிஉச்ச தேர்ச்சியைப் பெற்ற மாணவனுடன் க.பொ.த (உ/த) படிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிடுவான்.

ஆனால் க.பொ.த (உ.த) பரீட்சையானது ஒரு போட்டிப்பரீட்சையாகும். ஏனெனில் சித்தி பெறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களில் ஒரு சில ஆயிரம் மாணவர்களே பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புண்டு. எனவே அது போட்டிப்பரீட்சையாகி விட்டது. முதல் நியமனம், பதவி உயர்வு என்பன போன்றவற்றிற்கும் போட்டிப் பரீட்சை நடத்தப்படுவதுண்டு. எனினும் சில நியமனங்கள் அரசியல் ரீதியானவை; அவற்றிற்கு பரீட்சை வரையறைகள் இல்லை.

அரசாங்கப் பாடசாலைகள் தரம் 1AB, தரம் 1C, தரம் II, தரம் III என வகைப்படுத்தப்பட்டு இருந்தன. இவ்வகை தரம் II வகையான பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவர் நிறைவேற்று அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தாரே தவிர அவர் அதிபர்தரம் கொண்டவர் அல்ல. ஆனால் அதிபர் தரம் IIIக்கான போட்டிப்பரீட்சைக்கு தோற்றியிருந்தார்.

இதற்கிடையில் கல்வியமைச்சு ஒரு சுற்று நிருபம் அனுப்பியிருந்தது. அதில் நிறைவேற்று அதிபர்களாக பணி புரிபவர்கட்கு, அவர்கள் பணி புரியும் பாடசாலைக்கான அதிபர் தரம் வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் ஏற்கனவே அதிபர் தரம் ஏதேனும் உள்ளவர்கட்கு இது பொருந்தாது எனவும் சுற்றறிக்கை குறிப்பிட்டிருந்தது. எனவே இங்கு நம்மவருக்கு அதிபர் தரம் II கிடைக்க விருந்தது. ஆனால் நடந்ததோ வேறு.

அதிபர் தரம் IIIற்கான போட்டிப்பரீட்சையில் நம்மவர் சித்தியடைந்து விட்டார். முன்னைய திகதியொன்றில் இருந்து அவரது நியமனம் அமுலுக்கு வந்தது. சுற்று நிருபப்படி அதிபர் தரம் உள்ளவராக அவர் மாறிவிட்டதால் அவருக்கு அதிபர் தரம் II கிடைக்கவில்லை.

அவர் பரீட்சையில் சித்தி பெறாமல் இருந்திருப்பின் தரம் IIஐப் பெற்றிருப்பார். சித்தியடைந்தமையால் தரம் IIIஐப் பெற்றார்.. அவர் நல்ல வாய்ப்பொன்றை இழந்துவிட்டார். எனவே பரீட்சையில் தவறவும் அதிட்டம் வேண்டும். நம்மால் கற்பனை செய்து பார்க்கவும் முடியாத சம்பவமாக இது அமைந்து விட்டது.

நாம், எமது மனித சுபாவத்திற்கு ஏற்ப நமது முயற்சிகளை மேற்கொண்ட போதும் எதிர்பாராத திருப்பங்களை வாழ்வில் சந்திக்கின்றோம்.

நம்முடன் ஒன்றாகக்கற்ற, கல்வியில் பலவீனமான சிலர் வாழ்வில் உச்சத்தில் இருக்க கெட்டிக்காரர் பலர் வாழ்வின் கடைக்கோடியில் அவதிப்படுகின்றார்கள்.

நாம் நினையாதது எல்லாம் நடக்கின்றது. நினைப்பதெல்லாம் நடப்பதில்லை, இவைதான் இறைவன் என்ற ஒருவன் உள்ளான் என்பதை நம் தலையில் குட்டி நினைவுபடுத்துகின்றது.

சில மாதங்களுக்கு.முன் ஒரு விடயம்; பிரிட்டிஸ் கவுன்ஸில், ஆங்கில மொழிமூலம் புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய கட்டுரைப் போட்டியை நடத்தியது. அதில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு லண்டனுக்கு இலவச கல்விச் சுற்றுலாவை வழங்கியது.

ஆனால் இங்கு வேறு ஒருவர் அதிட்டசாலியானார். இரண்டாம் இடம் பெற்றவருக்கு திருமண ஏற்பாடுகள். ஆகவே அவரால் பயணிக்க முடியவில்லை.

எனவே மூன்றாம் இடம் பெற்றவர் அதிட்டம் பெற்றார். இதை என்னவென்று சொல்வது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் கத்தோலிக்க வாரஇதழ் 'நம்வாழ்வு'. இவ்விதழின் ஆசிரியர் அருள்தந்தை வின்சட் சின்னத்துரை அடிகளார்

யேசுவின் வாழ்க்கை வரலாற்றை "புதிய சாசனம்" எனும் பெயரில் புதுக்கவிதையில் இயற்றியுள்ளார்.

கவிஞர் கண்ணதாசனின் "இயேசு காவியம்" திரு - மரிய அந்தோனியின் "அருள் அவதாரம்' திரு.இராச அருளானந்தம் அவர்களின் "நற்செய்திக் காவியம்." கவிமணி நிர்மலா சுரேஷ் எழுதிய "இயேசு மாகாவியம்" போன்ற கிறிஸ்தவத் தமிழ்க் காப்பியங்களின் வரிசையில் 'புதிய சாசனம்' சிறப்புறத் திகழ்கின்றது.

சாசனம்" என்ற தலைப்பிலே இயேசுவின் வாழ்க்கைக்கும் அவர் அருளிச்சென்ற செய்திக்கும், ஒரு புதிய எழுத்து வடிவம் தந்துள்ளார், அருள்திரு வின்சன்ட் சின்னத்துரை அவர்கள். இன்றைய இலக்கிய இரசனைக்கு ஏற்ப புதுக்கவிதையில் இயேசுவுக்குப் பெருமை சேர்த்துள்ளார். இன்றைய சமூகச்சூழலுக்கு ஏற்ப செய்திகளைக் கருத்தாக்கம் செய்துள்ளார். இயேசு பற்றிய பல ஓவியங்களையும் சேர்த்து இந்நூலுக்குச் செழுமை சேர்த்துள்ளார்......." என்கிறார்.

மதுரைப் பேராயர் தம் வாழ்த்துரையில் ....." தமிழ்க் காப்பியத்தின் அவையடக்கம்........

# புதுக்கவிதையில் இயேசுவின் வாழ்க்கை வரலாறு "புதிய சாசனம்"

இந்நூலுக்கு உரோமை நகரில் இருந்து ஆசியுரை வழங்கிய மேதகு கர்தினால் சைமன் லூர்த்துசாமி ஆண்டகை,

புதுப்புனலாகப் புறப்பட்டுள்ள இப்புதிய சாசனம், புதிய சிந்தனைகளை நம்மில் தோற்றுவித்து, புனித வாழ்வில் எம்மை வார்த்தெடுக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழ் இலக்கிய உலகம் கண்ட இப் புதிய சாசனத்தைப் படித்தேன்:

அருள்நிறை அம்மா அழுதது ஏனோ?
தந்தையின் இல்லம் த னயனின் உள்ளம் அல்லவா?
இதுவே எனது திருமறைப்பணி அல்லவா?

என்ற பழுத்த வரிகளில் இயேசுவின் பணி இலக்கை விவரிக்கத் தொடங்குகிறார்.

சிறகுகள் கொண்ட பறவைகளைவிட
சிறந்தவர் நீங்களல்லவா?
பறவைகளுக்குப் பரிவு காட்டுபவர்
உங்களுக்கு உதவமாட்டாரா?"என்றவரிகள்

விசுவாசக்காற்றை நாம் சுவாசிக்கச் செய்கின் றன. எனக்குறிப்பிடுகின்றார்.

சென்னை - மயிலை பேராயர் அருள்தாஸ் ஜேம்ஸ் ஆண்டகை தம் அருள் உரையில் "புதிய

"ஆகாத கல் நான்
என்னை அடிக்கல்லாக்கு,
வேகாத சுண்ணம் நான்
என்னை வெற்றிலையின்
சிவப்பு ஆக்கு என்றும்,......

மரியன்னையின் துயரம் விரிவாக உரைக்கப்படுகிறது.

"முள்ளில் விழுந்த இலையாய்
முழுதும் கிழிந்த மகனைக்
கல்லில் எழுந்த சிலைபோல்
நின்று கண்ணீர் வடித்தாள்"....எனவும்.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்கிய ஞான பாரதி வலம்புரிஜோன் அவர்கள்...

சொல்ல முடியாததைச் சொல்ல முயலு கிற சூட்சுமத்தில் சுடர் விரிப்பதுதான் புதுக்கவிதை. சொல்லிவிடுவது மரபு. சொல்ல முயற்சிப்பது புதிது. எப்போதுமே தேடலிலே இருக்கிற தெள்ளிய மகிழ்ச்சி, தேடி அடைவதிலே இல்லை தான். அந்த வகையில் இளைய உலகத்தின் பிரபஞ்சக் கேவலாக பெருமூச்சைப் போல வெளியிட்டு நிரந்தரமான நிழலைப் போல நிலைத்து விடுகிற சூரியனின் வியர்வைதான் புதுக்கவிதை.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நதிகளுக்கும் சலங்கை கட்டும் நட்டுவனார்கள் நகாசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளைக் கவிதைகள் என்று கைமாற்றுகிற உலகத்தில், இலவம் பஞ்சு ஆமணக்கு வித்தாகத் திகழுகிற அண்ணல் "கவிப்பேரொளி" அருட்தந்தை வின்சன்ட் சின்னத்துரை அவர்கள் பிரமிடுகளை நகர்த்தியிருக்கிறார்.

தேவகுமாரனை மடியிலே கிடத்திக்கொண்டு, தன் உப்பு நீர்ப்பூக்களால் உலர்ந்து போன உடலத்தை மாமரியா கழுவியதை,

"கருவறையே கலங்குதம்மா!
கல்லறையே குலுங்குதம்மா!
பிழையில்லாச் சிலையாக
பிறப்பெடுத்த என்மகனே!
கடைசிவரை என்
கருவறையில் சிலையாக
இருந்திருக்கக் கூடாதோ"

என்கிற வரிகளைப் படிக்கிற போது குருதி வெள்ளம் குதித்துப் போகிற நரம்புகளில் உணர்ச்சி சோம்பல் முறிக்கிறது. அணுத்திரள்களில் எல்லாம் அவலத்தின் ஆட்சி நடக்கிறது. "முந்தித்தவம் கிடந்து என்று தொடங்குகிற பட்டினத்தடிகளின் கண்ணீர் வரிகளின் கதகதப்பு கண்களைக் கூட அடைகாக்கிறது." எனக் குறிப்பிடப்படுகின்றார்.

நூலாசிரியர் "தாயே! தமிழே!
தலைநாள் அழுதே!" எனும் தமிழாஞ்சலியில்

"தாயே! தமிழே!
தலைநாள் அழுதே!
பூவே! பொழுதே!
புலர்ந்திடும் அழகே!

புண்ணியம் யாவினும்
புரிந்திட்ட பெருந்தவம்
உன் மொழி அறிந்த
மனிதனாய் பிறந்ததே!

வற்றாத ஊற்றாக
வருகின்ற வண்ணத்தமிழே!
பொங்கிவரும் சிந்தனையை
புதுக்கவிதை கூட்டிவர!

முற்றாத வயதில்
மூண்டு வரும் ஞானத்தை
முறைப்படுத்தி முன்னிருத்தி
ஆகம ஞானியாம் –
ஆலய மேனியாம் –
அன்பின் செய்தியாய்
அவனிக்கு வந்த மகன்
பரமனின் பிள்ளை அவன்!
இயேசுக் கிறிஸ்துவின் –
வாழ்வு தன்னை
பொழிந்தெடுக்க முனைந்துள்ளேன்...."

என்று கவிதையிலும்; ஓங்கி வளர்ந்த ஒலிவ மரங்களுக்கிடையில் காலக்காற்று தன்னை வகிடெடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. காரணம், அது வரை உலகச் சரித்திரம் ஊர்ந்து கொண்டிருந்த போது, கி.மு.கி.பி என்று காலங்களை மையப்படுத்திய சரித்திரம்.

பாலசுதீன பூமியில் நிறைவேறியது.
ஆம் - இயேசு கிறிஸ்துவின் பிறப்பு -
கி.மு.கி.பி. என்று வரலாற்றை நேர்வகிடு எடுத்தது.

அடிமட்ட மக்களின் உரிமைகள்
ஆதிக்கவர்க்கத்தால் உதறப்பட்டபோது, உதிர்ந்து போன மனித மனங்களுக்கு ஒரு புரட்சிகரமான ஆற்றலின் முனைப்போடு தம்மை வெளிப்படுத்திக் கொண் டவர்தான் இயேசுக்கிறிஸ்து.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அவர் - ஆராதிக்கப்படுகிற புனிதமாக இருக்கிறார் என்கிறது சமயம். அவர் ஆற்றல் மிக்க மனித நேய வாதியாக வாழ்கிறார் என்கிறது சமூகம்.

இப்படிப் பன்முகப் பார்வைபட்டுள்ள இயேசு கிறிஸ்துவை இந்தக் காப்பியத்தின் வழியாக மனித நேய வாதியாக வெளிப்படுத்தியுள்ளேன்...... என்கிறார்.

இக்காவியத்தின் சில கவிதைச் சிறப்புக்களை அடுத்த இதழில், பார்ப்போம்..........

கலாபூஷணம் – புலவர். அரியநாயகம்
37 பேராலயவீதி - திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் எத்தனை நாட்களுக்கு---?

பொழுதெல்லாம்
பொய்யாக இருந்துவிட்டு
தமக்குரிய நேரம்
வந்ததும்
தட்டிவிட்டுப் போகும்
நன்றியற்ற மனிதர்களிடம்
அன்பையும், பாசத்தையும்
எதிர்பார்த்தபடி
இன்னும், எத்தனை,
என் உயிர் வாழ்வுகள்
தொடரும்?
நம்பி நம்பியே
ஏமாந்து ஏமாந்து
அடிக்கடி
தனித்துத் தனித்து
தனிமையின்
தாங்கமுடியாச் சுமைகளால்
தவிக்கும் சோகத்தை
யாரிடம் சொல்லியழுவது?
நிழல் தேடி
நிம்மதி தேடி
வந்த போதெல்லாம்
நெருப்புப் போர்வைகளால்
போர்த்தீர்களே?
நீங்களும் இப்படியா?
என்பதை
நினைத்து நினைத்தே
தினம் தினம்
என் மூச்சுக்கள் திணறுகின்றதே
அது
உங்களுக்குப் புரியுமா?
அன்பின் - உண்மையான சுவைகளை
அறிய நினைக்கும் - என் கனவுகள்
அப்படியே - கலைந்து செல்கின்றன.

மென்மையான - என் உணர்வுகள்
எனக்குள்ளேயே ஊமையாகிப்
போகின்றன.
பெரிதாகக் கதறி
அழவேண்டும் போல
அடிக்கடி நினைக்கின்றேன்.
ஆனால் ---
அது கூட முடியவில்லை.
யாரிடமாவது - ஒப்புவிக்க
நினைத்தாலும்
நேற்றைய ஏமாற்றங்கள்
அதைக் கூடத் தடுக்கின்றது.
அதற்கும் திரும்பவும்
மனிதர்களிடம் தானே
போக வேண்டியுள்ளது.
விதி தந்த - இனிமை காணாத
வாழ்வை ----
வாழ்ந்து விட்டுப் போவதற்காக
வாழ்கிறேன்.
தோன்றாப் பொருளான
தெய்வமே!
நீ
உண்மையின் வடிவம் தானே
உன்னால் முடியுமா
தோன்றும் பொருளாகி
என்னோடு பேசவும்
என்னை அன்பு செய்யவும்.

கு.பிரியங்கனி
பாலையூற்று (பங்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சமாதானமும் தொடர்பு சாதனங்களும்' என்னும் தலைப்பில் பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்ற பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

### திருகோணமலை மாவட்டம்

1ம் இடம்
*இராஜகோபால் அனுசுஷியா*
செல்வநாயகபுரம்
இந்து மகா வித்தியாலயம்

2ம் இடம்
*பால்ராஜ் ராஜ்குமார்*
நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயம்

3ம் இடம்
*முபாரக் முபிதா*
நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயம்

### மட்டக்களப்பு மாவட்டம்

1ம் இடம்
*லேந்தர் வினோஜினி*
விபுலானந்த வித்தியாலயம்
கருவேப்பன்கேணி

2ம் இடம்
*ய. விமலதாஸ்*
இராம கிருஷ்ணமிஷன்
சிவானந்தா வித்தியாலயம்
கல்லடி, மட்டக்களப்பு

3ம் இடம்
*லக்ஸ்மன் தம்பிராஜா*
புனித மிக்கேல் கல்லூரி
மட்டக்களப்பு

---

## 'அமைதிப்பணியில் தொடர்பு சாதனங்கள்' என்னும் கருப்பொருளில் இடம் பெற்ற சிறுகதைப் போட்டியில் பரிசை வென்றவர்கள்.

1ம் பரிசு 1500/-
சிறுகதை: மரணிக்காத மௌனங்கள்
முத்துமாதவன்
அண்ணா வீதி
கறுவாக் கேணி
வாழைச்சேனை

2ம் பரிசு 1000/-
சிறுகதை:
பேனையின் முனை உண்மையை எழுதட்டும்
கார்த்திகேசு அதிவீரன்
இல 102/D
பாடசாலை வீதி
ஆண்டிமுனை
உடப்பு
சிலாபம்

3ம் பரிசு 1000/-
சிறுகதை: அழைப்பினால் வந்த அமைதி
ஏ.எம். எம். பாரூக்
இல 214/A
பொது நூலக வீதி
மருதமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற அதிட்ட இலாபச் சீட்டின் முடிவுகள்

**1ம் பரிசு**
14"வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி
ப. சீட்டு இல: 4067
S. சிந்துஜா
புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை

**2ம் பரிசு**
C.D பிளேயர்
ப.சீட்டு இல 1606
நடராசா
மக்கள் வங்கி
அம்பாரை

**3ம் பரிசு**
வானொலிப்பெட்டி (TWO IN ONE)
ப. சீட்டு இல 4936
பங்கு தந்தை
றோ. க. ஆலயம்
சின்னக்கடை
திருகோணமலை.

## ஆறுதல் பரிசுகள்

**9Band டிஜிட்டல் வானொலி**

1) ப. சீட்டு இல 2004
K.L மோகனதாஸ்
54.2ம் வாவி வீதி
மட்டக்களப்பு

2) ப. சீட்டு இல 1696
A. செபமாலை
6/129
சொறிக்கல்முனை

3) ப.சீட்டு இல 160
C. லனுஷன்
இல 513/81
கண்ணகி அம்மன் வீதி
மட்டக்களப்பு

4) ப. சீட்டு இல 2711
திருமதி A.A தாஸ் விமலா
கல்குடா வீதி
வாழைச்சேனை

5) ப. சீட்டு இல 2765
பங்குத்தந்தை
றோ. க. ஆலயம்
கல்லாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு அமைதிப்பணியில் தொடர்பு சாதனங்கள் என்னும் பொருளில் நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை**

# மரணிக்காத மௌனங்கள்!!

## சிறுகதை

‘ஆ’...வென்று வாயைத் திறந்து .. நீண்ட கொட்டாவியை விட்டபடி .. கைகளைப்பின்னி ... மேலே உயர்த்தி ... உடலைப் போர்த்தியிருந்த சோம்பலை தள்ளி விட்ட ஏகாம்பரம் ... தனது இருக் கைக்கு முன்னாலிருந்த சுவரில் மாட்டியிருந்த மணிக் கூட்டை தான் அணிந்திருந்த கண்ணாடிக்கூடாக கூர்ந்து பார்த்தார்.

இரவு மணி பனி ரெண்டை காட்டிற்று... ஸ் ஸீ ...’ என அசைந்து... தனது உடலை கதிரையிலே சார்த்திக் கொண்டார் மேசை மேல் வாரப்பதிப்பிற்கான சிறுகதைகள் இவரது தேர்வுக்காக காத்துக்கிடந்தன... நாளைக் காலையில் அச்சுக்குச் சேர்க்க வேண்டும் சமாதானத்தின் பிரதிபலிப்பாகவும், சமூகத்தின் தேவையாகவும் இருக்க வேண்டும். ‘தினச்செய்தி‘ பத்திரிக்கையின் வாரப்பதிப்பாசிரியரான ஏகாம்பரத்தின் கண்கள்.... ஐந்து நிமிட ஓய்வு கேட்டு... கண்ணீரை அசதியோடு துளிர்க்கவைத்தது, கண்ணாடியை கழற்றி கைகளால் கண்களைத் துடைத்துக் கொண்டார். கால்களும் இரண்டு நிமிடம் நடப்போமா என அலுத்துக் கொள்ள ஏகாம்பரம் எழுந்து... நின்று... தனது மேல்மாடி அலுவலகத்தில் பொருத்தியிருந்த கண்ணாடி ஜன்னலின் ஊடாக வெளியே நோக்கினார், அ..ட..டா! அந்த நகரம் வித விதமான மின்சார விளக்குகளால் சோடிக்கப்பட்டு... சொர்க்க லோகமாகத் தெரிகிறது.., எண்ணெய் பூசினாற் போலிருந்த வீதிகளில் விலை உயர்ந்த வாகனங்கள்... எங்கே எதற்கோ எவரையோ ஏற்றிக்கொண்டு ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டிருந்தன.....

தெருவோரத்து... மின் சாரக் கம்பங்களின் கீழ் இந்நாட்டு மன்னர்களின் குடும்பங்கள், கை, கால்களை, நீட்டியும் முடக்கியுமாக சயனித்துக்கிடந்தனர் நாளைய கவலை எதுவுமில்லாமல்: சற்றே... தள்ளி நின்ற .. நெருப்பு வாகை மரத்தில் தொட்டில் போட்டு ஆடிய வௌவால்கள் ஒன்றை ஒன்றுசீண்டி எழுந்து வட்டமாய்ப் பறந்து..... மீண்டும் சட, சடத்து கிளைகளில் மோதி... அமைதி யாகி... பிறகும் எழுந்து பறந்து..’

தொலை தூரம் போகப் புறப்பட்ட புகைவண்டி ஒன்று போகட்டுமா எனக் குரல் கொடுத்து அசையும் சப்தம் .. மிக.. மெலிதாகக் கேட்டது.

ஏகாம்பரம் ... கண்ணாடி வழியாக வெளியே பார்த்தாலும், மனம் என்னவோ? இந்த அழகு ணர்வை .. உதறிவிட்டு வீட்டைச் சுற்றிவர விடை கேட்டுப்பறந்தது......

‘அப்பா... எனக்கு சப்பாத்து... இல்ல... போட்டு வரச் சொன்னா ரீச்சர்... வாங்கித்தராட்டி நான் பள்ளிக்குப் போகமாட்டன்.. கண்ணைக் கசக்கினான் நாலாவது மகன் சந்துரு... ‘ஐயோ...’ அதை விட நான் ‘டூர்’ போறது தான் முக்கியம்... அப்பா... எல்லாப் பிள்ளைகளும், காசுகட்டியாச்சு ... இன்னும், ஆறுநாள் தான்... ஆயிரம் ரூபா தரல்ல....’ வெப்பி சாரத் தோடும், கோபத்தோடும், குமுறி



னாள் கடைசிப் பெண்சந்திரபானு! மனைவியின் தங்கைபிள்ளைகள், நிலாவும், விதுவும், ஏதோ கேட்க ஓடிவந்தார்கள்’ ஏங்க! போனமாதமும், கடையில பாக்கி நிக்குது... நீங்கமட்டும் அங்க மூணு வேளையும் நல்லா சாப்பிட்டு ‘ஹாயா’ இருக்கிறியள்... இஞ்ச நாங்க படுற பாடு....... ஏகாம்பரத்தாரின் முகத்தைப் பார்க்கவும் பிடிக்காமல் வேற எங்கோ பார்த்தபடி சொன்னாள் மனைவி பார்வதம், எரிமலை எழுத்தாளர் புஸ்வாணமர்னார், மனது வலிப்பது... இது முதற்தடவையா? சே..’ மாதா மாதம் பழகிப்போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வானபிறகு.. யாரைக் கோபிப்பது... பத்திரிகைச் செய்திகள் தினமும் மாறினாலும், வாழ்க்கை நிலையில் ஒரு மாற்றமும் இல்லை 'மௌனம், மௌனமும், ஒரு இயலாத நிலையை வெளிக்காட்டும் உதடுகள் விலகாத மெல்லிய புன்சிரிப்பும் அது போதுமா? எல்லாம் நிறைய, ! சே...'

'ஏன்... தம்பி... இந்த சமாதானத்தைப்பற்றி 'தினச்செய்தி' அதாவது உங்க பத்திரிகையில ... 'ஏகாந்தன்' என்கிற புனைப் பெயரில நீங்க எழுதி வார கட்டுரைகளைப் படிச்சு வாரன்... ஆகா... கட்டுரை அருமை! எதிர்காலத்தில நடக்கப் போறதை நிதர்சனமா: சரியா! எழுதறீங்களே... அது எப்படி?' அம்மாச்சி ஆறுமுகம் தனது அரசியல் சந்தேகங்களை தீர்ப்பதற்கு ஏகாம்பரத்தாரை துளைத்தெடுப்பார், புகழுவார், வியப்பார், ! சத்தமிட்டுச் சிரித்தபடி.. வீட்டை மறந்து நாட்டுக்குள் நுழைவார் ஏகாம்பரம். ஊடகங்கள் சமாதானத்தின் திறவுகோல்கள் 'எழுகின்ற பிரச்சினைகள், பிரச்சனைகளுக்கூடான எண்ணத்தீர்வுகள், யதார்த்தமான சிந்தனைக் கோர்வைகள் எதிர் காலத்தில் நோக்கவுள்ள நடப்பின் தன்மைகளை மிக விசாலமாகவும், ஆழமாகவும் சீர் தூக்கி ஆராய்ந்தால் பிறக்கின்ற ஒரு திடமான தெளிவுதான் அது.... 'சுதந்திரம் கிடைத்த நிம்மதி. அவருக்கு.

வாயைப்பிளந்தபடி..... இருப்பார் ஆறுமுகம், 'வீட்டில், சாப்பாட்டுக்கு வழியில்ல... சமாதானத்தைப் பற்றி பெரிய ஆராய்ச்சி... அண்ண உங்களுக்கும் வேல இல்ல இவருக்கும்.....' என்று முடிக்காமலேயே.. எரிந்தபடி உள்ளே போனாள் பார்வதம்: வாழ்வில் தோற்ற சலிப்புக்குமுறல்,

நாம கேட்டது ஒன்று இரண்டு மூன்றுமாதத்திற்கு ஒரு தடவை அல்லது பொங்கல் சித்தரைக்கு வீட்டுக்கு வந்து போகும் 'அப்பா' என்னும் இவரால் தர முடியாது... என்ற ஏளனப் பார்வையோடு... தாயைப் பின் தொடரும் பிள்ளைகள் பொறுமை... எல்லாவற்றையும் வெல்லக்கூடிய ஆயுதம், வீட்டில் மட்டும்....'

'அது .. சரி ... தம்பி இந்த அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் என பெரிய பெரிய நாடெல்லாம் நம்மட பிரச்சனையில அதிக அக்கறை கொள்றாங்களே,ஏன்?' ஆறுமுகம் விடமாட்டார் போலத் தெரிய...

'அதெல்லாம் ஒரு வகையான... ராஜ உத்திகள், ஆணை போட்டுப் பழகிய தோஷம்.. சரி... சரி போகப்போக நீங்களே புரிந்து கொள்வீர்கள்... எனக்கு கொஞ்சம் இடுப்பு வலி தூங்கட்டுமா? ஏகாம்பரத்தார் எழுந்தார். அது போ என் பதைப் போல ஆறுமுகத்தாருக்குப் புரிய .. 'சரி சரி ... நான் வாரன் ' என்ற படி அவரும் எழுந்தார்.

இலங்கை மக்களின் சக வாழ்விற்கு... சமாதான அமைதிக்கு ஆணி வேரைத் தேடி ஆராயும் ஏகாம்பரத்தாருக்கு தனது வாழ்க்கையில் ஒரு நிம்மதியை மகிழ்வை நிலை நிறுத்த முடியாத நிலை ஏற்பட எது காரணம்?

மக்கள்: மக்களது அடிமையுற்ற வாழ்வு, சுதந்தரமற்ற அடக்குமுறைத்தனம், அதிகார அடாவடிச்செயல்.

இவரது அறிவுக்கும் சுறுசுறுப்பிற்கும் கொள்கைக்கும் இவரை நாடி வந்த 'கைநிறைய' கிடைக்கும் தலை சொறியும் வேலைகள் ஒத்துவரவில்லை: தலையாட்டியிருந்தால் தனி வாகனம் பெரிய வீடு.. பணம்...' மதிப்பு... பெரிய பதவி..

'தம்பி... நீ சுதந்திரமாக வாழு... பிறரையும் சுதந்திரமாக வாழவைக்கும் பணியில் இணை' தந்தை சொன்னது பத்திரிகை துறைக்கு மந்திரமானது: பத்திரிகை எழுத்தொன்றுதான்... சுதந்திரம் பணியும் சுதந்திரம்: பார்வதத்தின் வீடு ஆறுமுகத்தின் நாடு சற்றே உயர்ந்த ஏகாம்பரத்தாரின் வீடு, நாடு, மக்கள் உலகம்.

வீடுவரைக்கும் பிழைக்கத் தெரியாதவர், நாடு, உலகம் வரைக்கும் தீர்க்கதரிசி... அப்போது.. டெலிபோன்மணி கிணு கிணுத்தது பின் ஓய்ந்தது: பலபேர் போரைப் பயன்படுத்தி எவ்வாறல்லாமோ பணம் திரட்டி.. தமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாதது போல், நான் என் குடும்பம் என்ற கீழ்த்தரமான குறுகிய வட்டங்களை கீறிக் கொண்டு உணர் வற்றபிண்டங்களாக 'பணத்தால் உயர்வதுதான் மனிதப் பிறவி எடுத்த பயன்'என்ற விளங்க முடியாத வார்த்தைகளை உருவாக்கி முகமூடிகளை அடிக்கொருதரம் கழற்றி, மாற்றி, தம்மையும், சமூகத்தையும் ஏமாற்றியபடி....'

விடுமுறை முடிந்து... வேலைக்குப் போவதற்காக வெளிக்கிடும் போது ...' இனம், மக்கள், நாடு என்று வாழ்ந்தால்.... உங்களுக்கு சிலை வைக்கமாட்டாங்க இந்த தொழிலை விட்டுட்டு நாலு பணம் தேடப்பாருங்க...' மனைவி பார்வதம் ஆணையிட்டது போல சொன்னது ஏகாம்பரத்தாரின் மூளைக்குள் இப்போதும் எரிந்தது, அவளுக்கு சமுகத்தின் அந்தஸ்து முக்கியம் தாலி, மாலை, காப்பு, கல் வீடு, பணம் பட்டாடைகள்' மதிப்பு: கௌரவம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண பத்திரிகையாளன் மக்களுக்காக வாழ்ந்தான் மனைவியின் அந்தஸ்திற்காக வாழ முடியவில்லை..., அவள் என்ன சொன்னாலும் அதனை புன்னகையோடு ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் அவரிடம் இல்லாமல் போகுமா என்ன?

ஜன்னலின் ஊடாக, கண்களை மேயவிட்டு மனதை வீடு நோக்கி நகர்த்திய நெகிழ்வில் ஒரு கணம் உறைந்து மீண்டு.., ஒரு பெருமூச்சோடு தனது கதிரைக்கு திரும்புகிறார் ஏகாம்பரம். பாரிய இரைச்சலோடு அச்சியந்திரங்கள் மக்களது மூளைகளுக்கு தீனியாக பத்திரிகைகளை துப்பிக் கொண்டிருந்தன. சுவரில் புத்தன், யேசுநாதர், காட்டில் வில்லோடு நிற்கும் இராமன், கண்ணன், விடிவதற்கிடையில் சிறு கதையை தேர்ந்தெடுக்க வேண்டும், இலேசாக நெஞ்சு துவள்கிறது...... தலைவலி வரும் போல நெற்றிப் பொட்டு "கிண்" ணென்கிறது! கடமை 'செய்' என்கிறது...! சிறு கதைக் கட்டுக்களைத் தடவி.... ஒவ்வொரு வரிகளாக நத்தையாய் ஊர்ந்து... "சார்"... கூப்பிட்டபடி வந்தது அலுவலக சக ஊழியன் குமார்.

"என்ன குமார்!"

"ஒரு மகிழ்ச்சியான செய்தி..! இப்பதான் கிடைச்சது.." பீடிகை போட்டான் குமார். இதயம் பரபரத்தது ஏகாம்பத்தாருக்கு..., "நீங்க வாரா வாரம் எழுதிவந்த சமாதானம் பற்றிய கட்டுரைகளை பாராட்டி... உங்களுக்கு தங்கப்பதக்கமும், விருதும், பணமுடிப்பும் வழங்க தேசிய பொது நல அமைப்பு முடிவு செய்திட்டாங்க, டெலிபோன்ல ஆசிரியர் சொல்லலையா?... என்றான் குமார். டெலிபோன் அடித்தது... இலேசாக ஞாபகத்திற்கு வந்தது... எதுவித சலனமுமில்லாமல்.... எழுத்துக்களுள் ஒளித்திருக்கும் ஏகாம்பரத்தாரை மிக மிக வியப்போடு பார்த்தான் குமார், ஆச்சரியமாக, "என்ன சார்... நீங்க, மிகவும் புகழாக எல்லோரும் பேசுறாங்க, சந்தோசமா இருக்கிறாங்க, அவனவன் எதை எதையோ எழுதிட்டு சரித்திரம், காவியம், சாகாவரமுள்ளது! என தம்பட்டம் அடிச்சிட்டு பட்டம், பணத்திற்காக, ஆலாய்ப் பறக்கிறான்..." குமார் சொல்லிக் கொண்டே போக.... "குமார்...! ஒரு இனம் தாழவும், இன்னும் ஒரு இனம் வாழவுமான சாபக்கேடு, அல்லது கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படாத அரசியல் நிலைப்பாடு, மாறாத வரைக்கும் விருதுகளும், பாராட்டுக்களும், புகழ்மாலைகளும் வீண் வேலை...! சரி... நீ போய், ஒரு ரீ... எடுத்துவா" என்றார் ஏகாம்பரம்.

பொழுது புலர்ந்து கொள்ளும் வேளையில்... பதிப்பிற்காக தான் தேடி எடுத்த "மரணிக்காத மௌனங்கள்" என்ற சிறுகதையோடு எழுந்தார் ஏகாம்பரம்.

முத்துமாதவன்
கறுவாக்கேணி,
வாழைச்சேனை

## நாடுகளும் தேசிய சின்னங்களும்

| நாடுகள் | தேசிய சின்னங்கள் |
|---|---|
| இலங்கை | வாளேந்திய சிங்கம் |
| பிரான்ஸ் | அல்லிமலர் |
| பிரித்தானியா | ரோஜாமலர் |
| ஈராக் | சிவப்புரோஜா |
| பாக்கிஸ்தான் | பிறை |
| இந்தியா | சிங்கத்தின் தலை |
| ருமேனியா | பூவரசம்பூ |
| தாய்லாந்து | வெள்ளையானை |
| ஐக்கிய அமெரிக்கா | தங்கத்தடி |
| எகிப்து | தாமரைப்பு |

செல்வன் டெம்ஸ்டன் செலர்
தரம் 6H, இந்துக்கல்லூரி,
வாழைச்சேனை

## நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்

* அறுசுவைகொண்ட கனி எது ?
மாதுளங்கனி
* கற்பகதரு மரத்தில் உருவாகும் கனி எது ?
பனம்பழம்
* நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது ?
நோர்வே
* தூங்காத பறவை எது ?
புறா
* வேகமாக ஓடும் மிருகம் எது ?
சிறுத்தைப் புலி
* அதிக நீர் குடிக்கும் பறவை எது ?
புறா
* நான்கு கால் இருந்தும் நீந்தத் தெரியாதது எது ?
ஒட்டகச்சிவிங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிலையங்களால் தலைவலியா ?

தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லுதல் இன்று ஒரு நாகரிகமாகவும் கட்டாய தேவை போன்றும் கருதப்பட்டு வருகின்றது. ஆனால், இதனை நடுநிலைமையுடன் ஆராய்வோமாயின், டியூட்டரிகளால் ஏற்படும் நன்மைகளிலும் தீமைகளே அனந்தம் என்பது தெள்ளத் தெளிவாகும்.

பாடசாலை மாணவர்கள் டியூட்டரிகளில் கற்பதால் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். எவ்வாறெனில், அவர்கள் ஒரே விடயத்தை இரு இடங்களிலும் கற்கும் சந்தர்ப்பம் உண்டு. இரு இடங்களில், இரு ஆசிரியர்களால், இரு வெவ்வேறு விளக்க முறைகளாலும், உதாரணங்களாலும் சம காலத்தில் கல்வியூட்டப்படுகின்றனர். இதனால், அவர்களுக்குப் பாடங்களில் தெளிவு ஏற்படுவதற்குப்பதில், பெருங் குழப்பமே விழைகின்றது. இதனால், அவர்கள் போதிய விளக்கமின்றி, இரு இடங்களிலும் தாம் கற்றவற்றுள் சில விடயங்களை நுனிப்புல் மேய்கின்றனர் - மூளையில் ஏற்றுகின்றனர். பரீட்சைகளின் போது, வினாக் களுக்குத்தகுந்த - சரியான விடையளிக்க இவர்களால் முடியாமல் போகின்றது. ஆனால், தாம் சிறந்த முறையில் கற்றிருப்பதாக ஒரு போலியான நம்பிக்கையுடன் இவர்கள் இருப்பது வருந்தத்தக்க நிலையாகும்.

அத்துடன், பாடசாலைக்கும், டியூஷன் வகுப்பு களுக்கும் மாறி மாறிச் செல்வதால்: மாணவர்களுக்குத் தாம் கற்ற விடயங்களைத் திரும்பவும் பார்ப்பதற்கோ மீட்டலுக்கோ சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இதனால், மாணவர் கற்பிக்கப்பட்ட போதிலும், அவர்கள் கற்ற விடயங்கள் மனதில் தங்குவதில்லை. ஆயினும், தமது பிள்ளைகள் தொடர்ந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதால் அவர்தம் பெற்றோர் திருப்தியுடன் காணப் படுவர். சுயகற்றல் பற்றி இப்பெற்றோர் சிந்திக்காதது பெரும் துரதிஷ்டமே ஆகும்.

தனியார் கல்வி நிலையங்கள் தமது வகுப் புகளை அகால வேளைகளில் நடத்துவார்கள். இதனால், மாணாக்கர் போதிய ஓய்வின்றி உடல் நலப்பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். அது மாத்திரம ன்றி, பாதுகாப்புப் பிரச்சனைகளுக்கும் அவர்கள் ஆளாகவேண்டியவர்களாகின்றனர். இவை பற்றித் தனியார் கல்வி நிலையங்கள் எதுவுமே பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

தனியார் கல்வி நிலையங்களில் கற்பவர் அடையும் தீமைகளைக் கூறும்போது, இவ்வாறு கற்காத மாணவர் அடையும் தீமைகளையும் இங் கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதாவது, பாடசாலையில் பாடம் நடந்துகொண்டிருக்கும் போது, குறிப்பிட்ட பாடத்தை / விடயத்தை ஏற்கனவே டியூட் டரிகளில் கற்ற மாணவர்கள் தமது தரத்திற் கேற்ப ஆசிரியர்களிடம் தம் சந்தேகங் களைக் கேட்கின்றனர். அதிகம் அறிந்தவர் போல் தம்மைக் காட்டிக்கொள்ள விரும்பும் மாணவரும் இவ்வாறு செய்யத் தலைப் படுவதுண்டு. இத்தகைய மாணவர்கள் ஆசிரியர் தரும் ஆரம்ப விளக்கம் தமக்குத் தேவையில்லை எனவும், தமக்கு அதுபற்றிய போதிய விளக்கம் ஏற்கனவே உண்டெனவும் இதன் மூலம் ஆசிரியருக்குக் காட்டிக்கொள்கின்றனர். இதனால், ஆசிரியருக்குக் கற்பிப்பதில் உள்ள ஆர்வமே போய் விடுகிறது. டியூட்டரிக்குச் செல்லும் மாணவர் தொகை, அவ்வாறு செல்லாதோரின் தொகையைவிடக் கூடு தலாக உள்ளதால் ஆசிரியர் அடுத்த புதிய பாடத்திட் டத்திற்குச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார். அதன் விளைவாக, தமது வசதிக்குறைவுகள் காரணமாக ரியூசன் வகுப்புகளுக்குச் செல்லாத வசதியற்ற மாணாக் கரின் கல்வி நிலைமை வெகுவாகக் கீழே கொண் டுவரப்படுகிறது. இவ்வாறாக, டியூட்டரிகளால் அங்கே செல்லாத மாணவரின் கல்வியில் மண்விழுகிறது.

மேலும், இலாப நோக்கில் இயங்கும் பிரத் தியேக வகுப்பு நடத்துநர்கள் அதிக இலாபம் ஈட்டுவது ஒன்றையே அடிப்படை நோக்கமாகக் கொள்வதால், அவர்களால் மாணவர்களின் ஒழுக் கம், கட்டுப்பாடு முதலியவற்றைக் கட்டுப்படுத்தவோ கண்காணிக்கவோ முடிவதில்லை. இலாப நோக்கில் இயங்கும் நிறுவனமாக இந்தப்பிரத்தியேக வகுப்புகள் இருப்பதனால், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது மாணவர் மீது ஆசிரியர் கள் என்ற அடிப்படையில் தமது செல்வாக்கைச் செலுத்த முடியாமல் இருப்பதும் கண்கூடு. இதனால், மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் இடையில் காணப்பட வேண்டிய தொடர்புப் பிணைப்பு, உறவுநிலை, கௌர வம், மரியாதை, குரு பக்தி - யாவும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. இன்றைய மாணக்கர் தமது ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படியாமலும் மரியாதை யின்றியும் மட்டுமீறி நடப்பதற்குப் பங்களிப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் காரணிகளுள் டியூட்டரிகளின் பங்கு கணிசமானது என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

டியூட்டரிகளில் பல, ஒழுங்கான நேர அட்டவணைப்படி இயங்குவது கிடையாது. அடிக்கடி, குறுகிய கால முன்னறிவித்தலுடன் தமது நலன்களுக்கு அமைவாக மாற்றிக்கொண்டே இருப்பார்கள். இதனால், வகுப்புக்கு வந்த மாணவர்கள் வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் தரிக்க வேண்டியுள்ளது. இந்நிலைமை பல பிரச்சினைகளை ஏற்படுத்தச் சந்தர்ப்பமளிப்பதாய் உள்ளது. ஆனால், தனியார் கல்வி நிறுவனங்கள் இதுகுறித்துக் கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை. யார் எக்கேடு கெட்டால் அவர்களுக்கு என்ன, தமக்குப் பணம் சேர்ந்தால் சரி என்று இருப்போர் அவர்கள்.

மேலும், மூலைக்கு ஒன்றாகக் காளான் போல் முளைத்திருக்கும் தனியார் கல்வி நிலையங்கள் பலவற்றில் மாணவர்கள் ஒழுக்கத்திலிருந்து விலகி நடவாதவண்ணம் ஏற்பாடுகள் எதுவும் பொதுவாகச் செய்யப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, கட்டணம் பெற்றுக் கொண்டதற்கான முறையான பற்றுச்சீட்டு மாணவரின் தொடர் முன்னேற்றம் பற்றிய அறிக்கை, மாணவரின் ஒழுங்கான வரவு முதலான விடயங்கள் குறித்து டியூட்டரி நிர்வாகிகள் அக்கறை கொள்வது முயல் கொம்பாக உள்ளது.

கல்வி நிறுவனங்கள் என்ற ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகத் தம்மைப் பதிவுசெய்துகொண்டு இயங்கிவரும் தனியார் நிறுவனங்களை இங்கு நாம் கருத்தில் கொள்வதில்லை. மாறாக, ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை முன்னெடுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களே இங்கு கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களால் ஏற்படும் தீமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இலவசக் கல்வியைச் செல்லாக் காசாக்கும் அமைப்புக்கள் இவைகளே. ஆசிரிய வாண்மையையும் இவை கேள்விக்குள்ளாக்குகின்றன. டியூட்டரிகளால் நன்மைகளும் இல்லாமல் இல்லை : ஆனால் அவற்றால் ஏற்படும் தீமைகளே அதிகமாக உள்ளது. இலவசக் கல்வியை வழங்கும் அரச பாடசாலைகளும் அவற்றில் கல்வி புகட்டும் ஆசிரியர்களும் தமது கடமைகளைத் தவறாது முன்னெடுப்பின் டியூட்டரிகளின் தேவைதானே இல்லாது ஒழிந்துவிட வாய்ப்புண்டு. கல்வி ஒரு நுகர்ச்சிப் பண்டமாகவும் கற்பித்தல் ஒரு வியாபாரமாகவும் ஆகும் நிலை வளர்முக நாடாகிய எமது நாட்டிற்கு உகந்ததல்ல என்பதை யாவரும் உணர்வது நல்லது.

- S. ரஞ்சன் செல்வக்குமார் -

19ம் பக்க தொடர்ச்சி

<u>இயேசுவே நீரே மீட்பர் - நீரே இறைவன்</u>

- லூக்கா 5:31

- காணாமற்போன ஆட்டைத்தேடிச் சென்ற நல்லாயனைப் போன்று கிறிஸ்துவைப் பின்பற்றி, இறை உறவிலிருந்து விலகியவர்களைத் தேடிச்செல்ல எமக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. இது திருமுழுக்கு மூலம் எமக்களிக்கப்படுகிறது.

- போதைப் பொருள், குடிப்பழக்கம், சூது, கெட்ட நடத்தை ஆகிய குற்றச் செயல்களிலீடுபட்டு, மதத்தையும் கைவிட்டு வாழும் வளர்ந்தோர், இளைஞர், யுவதிகள், பிள்ளைகள் அனைவரையும் மீட்டு, இறைவனோடு ஒப்புரவாக்கும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- இவ்வுலக வாழ்வில் கிடைக்கும் எல்லையற்ற சந்தோஷத்தைவிட, இறைவன் தரும் நிலையான மகிழ்ச்சியான நித்திய வாழ்வின் பேரின்பத்தையடையும் வழிவகைகளைச் சமூகத்திற்கு எடுத்துக் காட்டவேண்டும்.

அரபு வளைகுடாவில் உள்ள கட்டார் நாட்டில் கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டுவதற்கு அனுமதியையும் இடத்தையும் வழங்க அந்நாட்டு அரசு முன்வந்துள்ளது. வழிபாட்டு சுதந்திரத்தை கட்டார் நாட்டின் எண்ணப்போக்கிற்கு ஏற்றவகையில் இவ் அனுமதியை வழங்க பஞ்சாயத்து விவகாரங்களுக்கான அமைச்சகம் முன்வந்துள்ளதாக அரச அதிகாரி ஒருவர் கூறினார் கடந்த நவம்பர் மாதம் 4ம் திகதி கட்டார் நாட்டிற்கும் வத்திக்கானுக்கும் இடையிலான முழு அரசியல் உறவு உருவாக்கப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்



க.பொ.த (சாதாரணம்)

- கத்தோலிக்க திருமறை-

❖ மெற்றில்டா

21ம் பாடம்

## இறையரசின் வளர்ச்சிக்காக

### நற்செய்தி என்றால் கிறிஸ்து நாதராகும்

- இயேசுவின் மூலம் இறைதந்தையின் நற்செய்தி உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டது.
- அச்செய்தி இயேசுவின் உயிர்ப்பின் பின் பரிசுத்த திருச்சபையின் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தப் பட்டது.
- இயேசுவின் உயிர்ப்பினால், நாமும் உயிர்த்தெழும் பேறு பெற்றுள்ளோம்.
- இன்று கிறிஸ்தவர்கள் அவரது உயிர்ப்பிற்குச் சான்றுபகர, சமுதாயத்துக்காக உழைக்க வேண்டும்.
- லௌகீகம் எம்மைத் திருப்திப்படுத்தாது, மாறாக இறையுறவே திருப்திதரும்.
- இயேசுவை நமது வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு அவரது பாடுகள், மரணம், உயிர்ப்புக் குச் சான்று பகரவேண்டும்.

### நித்திய இன்பத்தை உருவாக்கிக் கொள்ள உமக்குப்பின்னே நாங்கள் வருகின்றோம்.

- சொல்லாலும், செயலாலும் செய்கின்ற மிகச்சிறிய தொரு செயலையென்றாலும், இறைவனுக்கு ஏற்றதாகத் தூயகருத்தோடு செய்கையில் இறையரசு போதிக்கப்படுகிறது.
- மனிதனுடைய உள்ளத்தில் இறைவன் செயலாற்றுகையில் இறையரசு உதயமாகின்றது.
- தீய எண்ணங்களும், உலக ஆசைகளும், மனித உள்ளத்தில் குடிகொள்கையில் அங்கு லௌகீக அரசு உருவாகின்றது.
- தூயபவுல் "நீங்கள் இறைகரங்களில் தங்கி வாழும் போது இச்செயல் ஒரு கிறிஸ்தவச் செயல் என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்". என்பது போல நாம் செயற்படவேண்டும்.

### இறையரசின் மதிப்பீடுகள் துலங்க நாம் பின்வருமாறு செயற்படலாம்

(1) மதிப்புக்குரியவர்களை மதிக்க வேண்டும்.
(2) சாந்தமாகப் பேச வேண்டும்.
(3) விரும்பத்தக்க விதத்தில் வாழவேண்டும்.
(4) கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.
(5) அனைத்தையும் அன்போடு ஏற்கவேண்டும்.
(6) கவலையோடிருப்பவர்க்கு ஆறுதல் கூறவேண்டும்
(7) எப்போதும் மகிழ்வோடு செற்படவேண்டும்.
(8) மற்றவர்களைத் தைரியமூட்டும் வண்ணம் பேசவேண்டும்.
(9) நேர்மையாக நடக்கவேண்டும்.
(10) பொய், களவின்றி வாழவேண்டும்.

### உமது கரங்களைப் பற்றிக்கொண்டு உம்மோடு வருவேன்.

- மத்தேயு 7:21
- ஆபிரகாம் இறைவார்த்தையை ஏற்று அதன்படி நடந்தார்.
- நம்மை அன்பினாலழைக்கும் இறைவனுக்கு அன்பினூடாகவே பிரதியன்பு காட்டுகையில் நம் செயலிலுள்ள விசுவாசம் வெளிப்படும்.
- பெயரளவில் கிறிஸ்தவராக வாழாது பத்துக்கற்பனைகள், இறையசின் மதிப்பீடுகளின் படி வாழ்வது நம் கடமையாகும்.
- திருச்சபையின் படிப்பினைகளையேற்று, திருவருட்சாதனங்களைப் பெற்று, அன்புப் பணியிலீடுபட்டு, நற்செய்தியைப் போதிக்க வேண்டும்.
- பாடசாலை, வகுப்பறை, குடும்பம், சமூகம் எங்கும் கிறிஸ்தவ முன்மாதிரிகையை வெளிப்படுத்த வேண்டும்.

(18ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புக் கல்வி வளர்ச்சிக்கு மத நிறுவனங்களின் பங்களிப்பு

**அருள். திரு. எஸ். ஜே. ஐ. மத்தியூ, எஸ். எஸ். ஜே.**

இத்தலைப்பினை உற்று நோக்குகையில் இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியிருக்கின்றது. 1977இற்கு முன்னர் மட்டக்களப்பு எனும் பொழுது மட்டக்களப்புக் கல்வி மாவட்டத்தைக் குறித்தது. அது வாழைச்சேனை தொடக்கம் பொத்துவில் வரையான ஒரு கல்விப் பிரதேசத்தை வரையறை செய்தது. இக்கட்டுரை தற்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தை உள்ளடக்கியதாக அமைந்தாலும் மத நிறுவனங்கள் முன்னர் கூறிய பரந்துபட்ட பிரதேசத்திலே ஆற்றிய பலவகைப்பட்ட கல்விப்பணிகளைக் குறிப்பிடாது இருக்க முடியாது. மேலும். இக்கட்டுரை 1961ம் ஆண்டு இலங்கை அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றதற்கு முன்னுள்ள காலம், பின்னுள்ள காலம் பற்றிய கல்வி சம்மந்தமான குறிப்புக்களை உள்ளடக்க வேண்டியதும் முக்கியமான தாகும்.

இக்கட்டுரையில் கல்விப்பணி பற்றிக் குறிப்பிடுவது நியம முறையிலான கல்வியும், சமூக சேவையோடு கூடிய கல்வியும் ஆகும்.

கிழக்கு மாகாணத்தில் கல்விப் பணியாற்றியவர்கள் கத்தோலிக்க, மெதடிஸ்த, அங்கிலிக்கன் மதப்பிரிவினர்களாகும். கத்தோலிக்க சமயம் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகளாக இலங்கையிற் பரவி வரினும் 1814ம் ஆண்டு இலங்கை வந்த மெதடிஸ்த சபையினரே முதன் முதலில் மட்டக்களப்பில் கல்விக்கூடம் அமைப்பதைக் காண்கின்றோம். இவ்வாண்டிற்கு முன்பே கத்தோலிக்கர் பள்ளிக்கூடங்கள் அமைத்ததற்கான சான்றுகள் எதுவும் கிடைத்தில. 1850களின் பின்னரே கத்தோலிக்கப் பள்ளிக்கூடங்கள் உதயம் பெறுகின்றன. எனவே, 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை கத்தோலிக்கர் இங்கு பள்ளிக்கூடங்களை அமைக்க குறிப்பிடக் கூடிய முயற்சிகள் எடுக்கவில்லை எனலாம். இரண்டாவதாக, கிழக்கு மாகாணத்திலே கத்தோலிக்கர் சிறு தொகையினராகவே இருந்தமையால் நீண்டகாலமாக மட்டக்களப்பு மறை மாநிலம் (Diocese) யாழ் மறை மாநிலத்தின் ஒரு பகுதியாகவே இருந்துவந்துள்ளது. பல ஆயர்கள் (Bishops) பள்ளிக்கூடங்கள் அமைக்க முயற்சி எடுத்தார்களாயினும் அவர்களின் தலைமைத் தாபனம் வெகுதூரத்திலிருந்தமையாலும் இம்முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

ஒல்ற் ஐயர் அவர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்திலே காலடி எடுத்துவைத்து ஒன்பது மாதத்திலேயே நோய் வாய்ப்பட்டு இறைவனடி சேர்ந்தார். இவரது ஞாபகார்த்தமாக இன்று மட்டக்களப்புப் பிராந்திய கல்வி அலுவலகத்தின் அருகாமையில் ''ஒல்ற் ஞாபகார்த்த மாடி மண்டபம்'' கம்பீரமாக நிற்கிறது. இப்பெரியார் மட்டக்களப்பின் முதலாவது ஆங்கில பாடசாலையான புளியந்தீவு மெதடிஸ்த மத்திய கல்லூரியை 1814ல் நிறுவினார். இது இலங்கைத்தீவில் உருவாகிய முன்னோடி ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் ஒன்றாகும். மட்டக்களப்புப் புளியந்தீவில் அமைந்த மெதடிஸ்த தேவாலயம், மட்டக்களப்புப் பிரதேசத்தின் பழமையான தேவாலயமாகும். எனினும் 1687க்கும் 1711க்கும் இடையில் பெரும் சமயப்பணி ஆற்றிய ஜோசப்வாஸ் அவர்கள் தாண்டவன்வெளி ஆலயம் உருவாவதற்குப் பெரும் காரணமாக அமைந்த சான்றுகள் உண்டு. இப்போதைய கல்வி மேம்பாட்டில் சிறார்களின் சமூகமயப்படுத்தலில் ஆலயங்கள் முக்கிய கருவியாகும். அதனால் இவற்றை இங்கு குறிப்பிடுகிறோம். மெதடிஸ்த திருச்சபையினர், மட்டக் களப்புப் பெண்களுக்கும், நாகரீகமோ, கல்வி வளர்ச்சியோ அற்று வாழ்ந்தவர்களான வேடர்களுக்கும் செய்த சேவை மிகமிகப் போற்றத்தக்கதாகும். மெதடிஸ்த திருச்சபையினராலேயே இந்நாட்டின் முதலாவது தமிழ்ப் பெண் கல்விக்கூடம் புளியந்தீவில் ஆரம்பிக்கப்பட்டது. மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஒரு வைத்திய சாலையை நடத்திவந்த இவர்கள், இக்கல்லூரியின் இன்றைய விடுதிச்சாலை உள்ள இடத்தில் பெண்களுக்கென ஒரு வைத்தியசாலையை நிறுவிப் பணி புரிந்தனர். இதில் இங்குள்ள பெண்கள், சிறப்பாக முஸ்லிம் பெண்கள் வைத்திய வசதிகளைப் பெறக் கூடிதாக இருந்தது. ஜோவான்ஸ் மருந்துச்சாலை என்பது தான் இதன் பெயராகும். பின்னர் இந்த வைத்தியத் தொண்டு கல்முனை, விந்தனை ஆகிய பகுதிகளுக்கும் பரவியது. விந்தனைப் பகுதியில் வாழ்ந்த பழங்குடிகளான வேடுவர் குலத்தாரிடமும் கல்வி விளக்கினை ஏற்றிவைத்தனர்.

1898ல் அரசாங்க அதிபரின் அறிக்கை ஒன்றின்படி விந்தனையில் மட்டுமன்றி கோட்டமுனை பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் மெதடிஸ்த திருச்சபைப் பாதிரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட தச்சுத் தொழிற்சாலை ஒன்றும் இருந்தமை கூறப்படுகிறது. இதிலே தச்சுத்தொழில் கற்பிக்கப்பட்டது. மெதடிஸ்த சபையினர் தாம் சென்ற இடங்களில் பாடசாலைகளை அமைத்தும், ஆலயங்களை அமைத்தும் சமயப்பணி ஆற்றினர்.

மட்டக்களப்பு வட்டாரம் :- மட்டக்களப்பு - 1839
கோட்டைமுனை - 1829
அமிர்தகழி - 1872
மஞ்சன்தொடுவாய் - 1922
முதலைக்குடா - 1935

செங்கலடி வட்டாரம் :- களுவன்கேணி - 1902
செங்கலடி - 1910

மேற்காணும் ஆலயங்கள் பற்றிய புள்ளி விபரங்கள், இந்த இடத்திலேயே, இக்காலத்தை அண்டிய காலப்பகுதியில் பாடசாலைகள் அமைக்கப்பட்டமைக்கு சான்றாக அமைகின்றன. இவர்களது ஏனைய கல்லூரிகள் மத்திய கல்லூரி,- மட்டக்களப்பு, அரசடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி - மட்டக்களப்பு (1887ல் தமிழ் ஆசிரியர்களைப் பயிற்ற ஆரம்பிக்கப்பட்டது.) வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை - மட்டக்களப்பு, கல்முனை பெண்கள் விடுதிப்பாடசாலை 1983ல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 1953ல் லீஸ் பாடசாலையுடன் இணைந்து வெஸ்லி உயர்தரப்பாடசாலையாகியது.

## மட்டக்களப்பில் கத்தோலிக்க சமயத்தினரின் கல்விப்பணி

போர்த்துக்கீசரின் இலங்கை ஆட்சி வரலாற்றை, வரலாற்று ஆசிரியனாக நடுநின்று நோக்குகையில் கத்தோலிக்க சமயக்குரு 'கொன்கிஸ்ட்டா' என்ற நூலை எழுதிய 'குவேயறோஸ்' சமயப்பணிகள் பற்றிக் குறிப்பிட்டாரே தவிர அக்காலக் கல்விப்பணி பற்றிக் குறிப்பிடவில்லை. 18ம் நூற்றாண்டில் ஜோசப் வாஸ் சுவாமிகள் மட்டக்களப்பிற்குப் பலமுறை விஜயம் செய்தார்கள். 1785ம் ஆண்டில் சகல கத்தோலிக்கப் பாடசாலைகளையும் முற்றாகத்தடை செய்யும் சட்டத்தினை டச்சு அரசாங்கம் பிறப்பித்தது. இதனால் இந்நாட்டிலிருந்த கத்தோலிக்க பாடசாலைகளைப் பற்றிய விபரங்கள் இல்லாமற் போய்விட்டது. எனினும், முதன் முறையாக இவர்களின் கல்விப் பணியினைத் தெளிவாக அறிய வாய்ப்பு ஏற்படுவது இலங்கை கோவாவிலிருந்து பிரிந்து ஒரு தனி மறைமாநில மாகமாறிய பின்னராகும். இது 1834ல் இடம்பொற்றது. 1849ல் யாழ்மறை மாவட்டம் கிழக்கு மாகாணத்தையும் உள்ளடக்கியதாகப் பிரிக்கப்பட்டது. 1893ல் கிழக்கு மாகாணம் தனியாக ஒரு மறைமாநிலமாகியது. முதலாவது யாழ் ஆயர் ஒறாசியோ பெற்றாக்கினி. யாழ் நகரில் பல பாடசாலைகள் உருவாவதற்கு காரணமானவர். இவரைத் தொடர்ந்து வந்த ஆயர்கள் செமேரியா, போஞ்சீன் போன்றவர்கள் கலாசாலைகள் உருவாக்குவதில் முக்கிய கவனம் செலுத்தினர். போஞ்சீன் அடிகள் நாட்டின் கல்விப் பணிக்குப் பலவற் றாலும் தொண்டு புரிந்தார். அவர் எழுதிய பல கட்டுரைகளில் இருந்தும் 1865ம் ஆண்டு மோர்கன் கல்வி ஆணைக் குழு முன்பும் அவர் அளித்த சத்தியத்தின் மூலமும் நாம் கண்டு தெளியலாம். மட்டக்களப்புக் கல்வி வளர்ச்சியில் ஆரம்ப காலத்தில் பெரிதும் தொண்டு ஆற்றியவர்கள் அமலோற்பவ மரியநாயகி தியாகிகள் சபையினர் (ஓ.எம்.ஐ) ஆவர்.

இவர்கள் காலத்திலேயே 1873ம் ஆண்டு புனித மிக்கேல் கல்லூரி, சிசிலியா பாடசாலை, மரியாள் பாடசாலை ஆகியவற்றிற்கான வித்தினை இட்டவர் பிரான்ஸிஸ் சேவியர் என்னும் குரு ஆவர்.

## கிழக்கு மாகாணத்தில் இயேசு சபையினர்

1870களில் சேவியர் அடிகளினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் பிற்காலத்தில் புனிதமிக்கேல் கல்லூரியாகவும், திருமலை புனித சூசையப்பர் கல்லூரியாகவும் திகழ்ந்தன.

19ம் நூற்றாண்டின் 3ம் கால் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில மொழிக்கு ஏற்பட்ட மவுசு காரணமாக ஏராளமான பாடசாலைகள் தோன் றின. ஏற்கனவே குறிப்பிட்ட 1873ம் ஆண்டு மட்டக்கப்புக் கல்வி வரலாற்றைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியமான மைல்கல் எனலாம். இவ்வாண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கல்வி மான்களை உருவாக்கி நாடு செழிக்க நலம் புரிந்த புனித மிக்கேல் கல்லூரி, புனித மரியாள் தமிழ்ப் பாடசாலை, புனித சிசிலியா பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலை ஆகியனவும், புளியந்தீவில் பெண்களுக்கான மவுண்ட் காமல் பாடசாலை, கோட்டைமுனையில் கலவன் பாடசாலை, கோட்டமுனை புனித அன்னம்மாள் கலவன் பாடசாலை ஆகியன இதே ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டன. எனினும் மெதடிஸ்த சபையினருக்கு இருந்த இந்தப் பாடசாலைகளை நடாத்தக்கூடிய போதிய மனித சக்தியும் நிதியும் அனுபவமும் கத்தோலிக்கருக்கு இருக்க வில்லை. ஏனெனில் மெதடிஸ்த சபையினர் ஏற்கனவே அரை நூற்றாண்டு காலமாக இந்நாட்டில் கல்விப்பணியாற்றிய அனுபவம் பெற்றிருந்தனர் என்று 1873ம் ஆண்டு அ.ம.தி. அறிக்கை கூறுகிறது.

தொடரும் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விவிலியம் கற்போம் 24 விடைகள்

எபிரேய, லேவியர், அழகாக, மூன்று, கோரை, கீழ், நாணல்களுக்கிடையே, ஆண், மோசே, எடுக்கப்பட்டவன்

## அறிவை வளர்ப்போம் 24 விடைகள்

1) அவுஸ்திரேலியா 2) இராமன்- சீதை 3) சார்ஸ் 4) பிரித்தானியா
5) குரான் 6) பண்டிதர் செ பூபாலப்பிள்ளை

**இரு போட்டிகளுக்கும் சரியான விடைகளை எழுதி ரூபா 100/= பரிசு பெறும் அதிட்டசாலிகள்**

அ. க. கீர்த்திகா
இல. 73, பேராலய வீதி
திருகோணமலை

C.S. நிகோஷன்
இல 36/2 எல்லை வீதி வடக்கு
மட்டக்களப்பு.

**ஒரு போட்டிக்கு மட்டும் சரியான விடைகளை அளித்து ரூபா 50/- பரிசு பெறும் அதிகூஷ்டசாலிகள்**

ர.லே ராஜ்கியான்
இல 16 கோணர் வீதி
மட்டக்களப்பு

அ. அகிலா
விபுலானந்த புரம்
மயிலம்பாவெளி
மட்டக்களப்பு



### பாராட்டுப் பெறுவோர்

டெம்ஸ்டன் செலர்
பிரதான வீதி
வாழைச்சேனை

ஓடேலியா ரூபகீர்த்தி
இல 140 எல்லை வீதி
செங்கலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசுப்போட்டி!**

**பிள்ளைகளுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி :- 30 . 09 . 2003**



## விவிலியம் கற்போம் - 26

# மோசேயின் வாழ்க்கை

*(விடுதலைப் பயணம் 3: 1–10)*

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

மோசே மிதியானின் அர்ச்சகராகிய தம் மாமனார் ...................................... ஆட்டுமந்தையை மேய்த்து வந்தார். அப்பொழுது ஒருநாள் பாலைவனத்தின் மேற்றிசையிலுள்ள கடவுளின் மலையாகிய ............................................ அடைந்தார். அங்கே ஆண்டவரின் தூதர் முட்புதரின் நடுவே தீப்பிழம்பில் அவருக்குத் தோன்றினார். முட்புதர் ........................... எரிந்து கொண்டிருந்தது. ஆனால் தீய்ந்துபோகவில்லை. இந்த அற்புதக் காட்சியைக் காண்பதற்காக மோசே அணுகி வருவதைக் கண்ட ஆண்டவர் "மோசே, மோசே" என்று .............................. நடுவிலிருந்து அவரை அழைக்க, அவர் "இதோ நான்" என்றார். ஆண்டவர், "இங்கே அணுகி வராதே, உன் .............................. மிதியடிகளை அகற்றி விடு, ஏனெனில் நீ நின்று கொண்டிருப்பது புனிதமான நிலம்'' என்றார். மேலும் ஆண்டவர், "உங்கள் மூதாதையரின் ............................., ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோப்பின் கடவுள் நானே" என்றுரைத்தார். மோசே அச்சத்தினால் முகத்தை மூடிக்கொண்டார். அப்போது ஆண்டவர், "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை ............................. கண்டேன். அடிமைவேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் ................................ குரலையும் கேட்டேன். ஆம், அவர்கள் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், பாலும் தேனும் பொழியும் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் .................... வந்துள்ளேன். எனவே, இப்போதே போ, இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை ........................ நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்" என்றார்.

*விடைகள்:–* பாதங்களிலிருந்து, இறங்கி, இத்திரோவின், கடவுள், எகிப்திலிருந்து, ஒரேபை, எழுப்பும், நெருப்பால், முட்புதரின், கண்களால்.

[வினாப்படிவத்திலேயே விடைகளை அனுப்புதல் வேண்டும். வேறாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி
30 – 09 – 2003

# பரிசுப்போட்டி!



## அறிவை வளர்ப்போம் ~ 26

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக.)

1. உலகின் முதலாவது பெண் பிரதமர்.
   (இந்திராகாந்தி, மாக்கிறட்தட்சர், ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா)

2. நிறவெறிக்கு எதிராகப் போராடி உயிர் நீத்த அமெரிக்க ஜனாதிபதி.
   (ஆபிரகாம் லிங்கன், ஜோன் எவ்.கென்னடி, ஜோர்ச் வாசிங்டன்.)

3. புகழ்பெற்ற குங்பூ வீரர் புருஸ்லி பிறந்த இடம்.
   (அமெரிக்கா, சீனா, ஹொங்கொங்)

4. 'றோ' எனப்படும் உளவு நிறுவனம் இந்த நாட்டைச் சேர்ந்தது.
   (அமெரிக்கா, இந்தியா, பாக்கிஸ்தான்)

5. உலகில் அதிக மக்கள் பேசும் மொழி.
   (ஆங்கிலம், ஹிந்தி, மென்டரின்)

6. இலங்கையில் உள்ள மாகாணங்களின் எண்ணிக்கை.
   (ஒன்பது, பத்து, பதினொன்று)

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

..............................................

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம்/ அறிவை வளர்ப்போம் - 26**
**தொண்டன்**
**அ.பெ.எண் - 44**
**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் ஈராண்டு நினைவு



**மண்ணில் : 31-08-1944**

**விண்ணில் : 11-08-2001**


"நீங்கள் என்னை மகிமைப்படுத்தப்படுத்த
நான் உங்களை அதிகமதிகமாய்
ஆசீர்வதிப்பேன்" (குழந்தை இயேசுவின் ஆசீர்வாதம்)

## ஜெயராணி மாணிக்கராஜா

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும்
வாழ்வான் (யோவான்.11.25)

செபத்தில் ஜெயம் உண்டு
ஜெகத்தில் செபம் ஜெயிக்கும்
உண்மையிது உணருங்கள்,
என உணர்த்திய அம்மாவே!

குழந்தை இயேசுவில் குறையில்லாத பக்தி
குடியிருந்தது உங்களில்
குடிகொள்ளச் சென்று விட்டீர்
குவலயத்தை மீட்ட
திருக்குமரன் இயேசுவின் குடியிருப்பிற்கு



**அன்புப் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார் உறவினர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**St. Ignatius** *Type Setting* - *28, Sinnalebbe Street, Batticaloa.*
*Printing & Cover Desiginig* - St. Joseph's Catholic Press. Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org